# மாயப் புன்னகை

## 1

விடிந்து விட்டது.

கண் விழித்த நந்தகுமாருக்கு 'அடடா... தூக்கம் கலைந்து விட்டதே' என்றிருந்தது.

இரு கைகளையும் பரபரவென்று தேய்த்துவிட்டபடி ரேகைகளை ஒரு பார்வை பார்த்தான்.

கண்டவர் முகத்தில் விழிப்பதைவிட இப்படி உள்ளங்கையை பார்ப்பது நல்லது என்று அவனது பாட்டி மிகச்சிறிய வயதிலேயே சொல்லியிருந்தாள்.

பின்னாளில் அவன் மனம் கவர்ந்த நடிகர் ஒருவரும், எழுத்தாளர் ஒருவரும், அரசியல்வாதி ஒருவரும், ஒரு இந்தியப் பிரசித்திபெற்ற விஞ்ஞானி ஒருவரும்கூட 'விடிந்ததும் உள்ளங்கையைப் பார்த்துவிட்டுத்தான் மற்றவைகளைப் பார்ப்போம்' என்று அவரவர்களுக்கான பேட்டிகளில் சொன்னதையெல்லாமும் அவன் படித்திருந்தான்.

எனவே அப்படி உள்ளங்கையைப் பார்த்தால் தானும் ஓர் ஊரறிந்த புள்ளியாகிவிடலாம் என்று நம்பியோ, இல்லை

அதை சோதித்துப் பார்க்கவோ அன்று முதலே அவனும் உள்ளங்கையைப் பார்ப்பதையே ஒரு வழக்கமாக்கிக் கொண்டுவிட்டான்.

சரி... அதனால் அவன் ஊரறிந்த ஒரு புள்ளியாக ஆனானா என்றெல்லாம் கேட்டுவிட வேண்டாம். அதற்காக முயற்சிகளில்தான் அவன் இருக்கிறான்.

நந்தகுமார் ஒரு சராசரிப் பட்டதாரிதான்.

அடித்துப் பிடித்து இடம் வாங்கி ஒரு டாக்டராகவோ எஞ்ஜினியராகவோ அவனால் முடியவில்லை.

எல்லாவற்றிலும் ஐம்பது அறுபது என்று மார்க்குகள் வாங்கி செகண்ட் கிளாஸில் பாஸ் செய்ததே பெரிய விஷயமாகிவிட்டது அவனுக்கு.

தொண்ணூறு மார்க்குகளுக்கு மேல் வாங்கியவர்களே 'தில்லாலங்கடி தில்லாலோ' என்று வேலைக்காக சிரமியும் போது ஐம்பதும் அறுபதும் சோறு சாப்பிட்டு ஜீவிப்பதே பெரிய விஷயம்தானே?

அதிலும் நந்தகுமார் இன்று ஒரு ஃப்ரீ லான்ஸ் பத்திரிகையாளன்! வித்தியாசமான செய்திகளுக்காக அலைந்து திரிந்து பத்திரிகைகளுக்கு அனுப்பி மாசம் மூவாயிரம் நாலாயிரம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பல சமயங்களில் வருவது அந்த மாசத்தின் பதினைந்து நாள் செலவுக்குகூட தாங்கமாட்டேன் என்கிறது. நல்லவேளை கல்யாணம் பிள்ளை குட்டி என்று குடும்பக் குழியில் விழுந்துவிடவில்லை.

அப்படி ஆகியிருந்தால் அவனது நண்பன் சங்கர ராமனைப் போல கன்னாபின்னாவென்று பொய் சொல்லி கண்டதையும் எழுதி ஜீவிக்க வேண்டி வந்திருக்கும்.



நந்தகுமார் அப்படி இல்லை. ஆதாரபூர்வமான செய்திகளைத்தான் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புகிறான்.

உறங்கிக் கண் விழித்த நிலையில் அவனுக்குள் இன்று எந்த மாதிரி செய்தி கிடைக்கப் போகிறதோ தெரியவில்லையே என்கிற கவலை!

நேற்றுதான் இந்தியா வந்திருந்த ஒரு அமெரிக்கப் பெண், ஊரைச்சுற்றிப் பார்க்க வந்த இடத்தில் அவளுக்கு கைடாக இருந்து செயல்பட கைலாசபதி என்கிற இளைஞனிடம் மனதைப் பறிகொடுத்து அவனை ரிஜிஸ்தர் மேரேஜ் செய்திருந்தாள்.

'காதலுக்கு கண் இல்லை' என்கிற கருத்துக்கு ஏற்ற விஷயம் வசமாய் வந்து மாட்டியது. எழுதி ஃபேக்ஸ் செய்திருந்தான்.

பத்திரிகை எடிட்டரும் பதிலுக்கு போன் செய்து 'நல்ல விஷயம்யா... இதே மாதிரி வித்தியாசமாவே விஷயத்தைத் தேடு' என்று பாராட்ட வேறு செய்து விட்டார்.

அதுவே பெரிய குளுகோஸ் ஆகிவிட்டது.

இன்று அந்த மாதிரி எதாவது செய்தி மாட்டுமா?

கேள்வியோடு எழுந்து மனிதர்கள் காலையில் செய்தாக வேண்டிய சகலத்தையும் செய்து முடித்தான்.

அவன் வரையில் டாய்லெட்டில் போய் உட்கார்ந்தபடி பேப்பர் வாசிப்பது என்பது உலகத்தின் உன்னதமான இன்பங்களில் சேர்க்க வேண்டிய ஒரு இன்பமான விஷயம்.

சுத்தமாக முக்கால் மணிநேரம்!

பேப்பர் படித்த மாதிரியும் இருக்கும் - வயறும் சுத்தமாகி மனது பரம சுகத்தில் மிதக்கும்.

எத்தனை பெரிய மனிதனாய் இருந்தாலும் தனிமையில் அவர்களிடம் சில கிறுக்குத் தனங்கள் இருக்கும்.

அதில் ஒன்று மூத்திரம் பெய்யும்போது பெய்யுமிடம் சுவரோரமாக இருந்தால் அதில் பீறிடும் மூத்திர நீரால் தன் பெயரை எழுதிப் பார்ப்பது.

நந்துவும் அப்படித்தான்.

அதே நாலுபேர் இருக்குமிடம் என்றால் மிக இறுக்கமாய் மாறிப் போவான். எது எப்படியோ ஓடும் வாழ்க்கையில் ஓடிக் கொண்டே இருக்க வேண்டி யிருக்கிறது. நிம்மதியாய் உட்கார்ந்து ஒரு நாள் மூச்சுவிட முடியவில்லை.

வயதும் இருபத்து ஒன்பதைக் கடந்து முப்பதுக்குள் பிரவேசித்து 'வாழ்வில் இன்னமும் நீ செட்டில் ஆகவில்லை நந்து' என்று சதா பிரச்சனைப்படுத்திக் கொண்டே இருக்கிறது. அவன் வயதுதான் ஒரு பிரபல சினிமா இயக்குநருக்கு... லான்சர்காரென்ன... செல்போனென்ன...? லட்சம், கோடி என்று ஜமாய்க்கிறார். நினைத்தாலே நந்துவுக்கு தீக்குச்சியில்லாமலே வயிறு எரியும்.

இந்திய அரசாங்கம் சத்தியமாய் எல்லோருக்கும் பொதுவாகத்தான் நாசிக்கில் நோட்டு அடிக்கிறது. ஆனால் அதை சிலர் மட்டும் கோணிச்சாக்கில் வாரி அள்ளுகிறார்கள். சிலருக்கு நாலணா எட்டணாகூட கிடைப்பதில்லை.

இது எதனால் என்று நந்தகுமார் அடிக்கடி கேட்டுக் கொள்வான்.

அவனது சகா சங்கரராமன் வேடிக்கையாய் அதற்கு பதில் சொல்வார்.



'எல்லாத்துக்கும் சுழிவேணும் நந்து. பிச்சைக் காரங்ககூட தினம் அம்பது நூறு பாக்கறாங்க. நம்மப்பாரு - ... கழுவத் தெரியாதவனையெல்லாம் பேட்டி எடுத்து பீறாய வேண்டியிருக்குது!' என்பார்.

''அது என்ன சார் சுழி?''

''சுழி தாம்பா எல்லாம்...''

''அதுதான் என்னன்னு கேக்கறேன்?''

''மச்சம்ப்பா... மச்சம்!''

''மச்சம்னா...?''

''அதிர்ஷ்டம்ப்பா!''

''அப்படி மாடி ஊட்டுக்காரன்லாம் அதிர்ஷ்டக் காரனுங்களா?''

''இல்லையா பின்னே. அதுமட்டும் இருந்துச்சுன்னு வை. ஒரு ஒத்தரூபா லாட்டரி சீட்டுபோதும். லைஃபே மாறிடும்.''

''அதுக்கு என்ன பண்ணனும்?''

''அது தெரிஞ்சா நான் ஏன் துணுக்கு எழுதிப் போட்டு ஐம்பது நூறுக்கு சாகப் போறேன்... அதுக்கு என்ன உண்டோ அதை நான் செஞ்சுட மாட்டேன்?''

''உளறாதீங்க சார்... அதிர்ஷ்டம், மச்சம் எல்லாம் சும்மா நாமளா சொல்லிக்கற விஷயங்கள்.''

''அப்படியா... அப்ப எது முட்டாப் பயலை எல்லாம் மேல வைச்சிருக்கு? உன்னையும் என்னையும் அலைய உட்டுகிட்டிருக்கு?''

- சங்கர ராமன் இப்படித்தான் திருப்பிக் கேப்பார். அந்தக் கேள்விக்கு ஏற்ற பதிலைச் சொல்லத் தெரியாமல் முழிப்பான்.

அப்படி ஒரு பக்கம் அதிர்ஷ்டம், சுழி, மச்சம் என்பதெல்லாம் பம்மாத்து என்று உதடு சொன்னாலும் தூங்கி எழுந்தவுடன் உள்ளங்கை ரேகையைப் பார்ப்பது எதோடு சேர்த்தி என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொள்வான்.

யார் முகத்திலாவது முழித்து அதனால் அந்த முகராசியால் அன்று லாட்டரி அடிக்க நேர்ந்துவிட்டால் என்னாவது என்கிற பயமா?

ஆமாம்... அதுதான் உண்மை!

எப்பொழுதும் புத்தி ஒரு விதமாகவும், உணர்ச்சிகள் ஒரு விதமாகவுமே மனிதர்களை ஆட்சி செய்கின்றன.

தன்னுள்ளும் அப்படித்தான் நடக்கிறது என்பதுதான் நந்தகுமாரின் தீர்மானம்.

காலைக் களேபரங்கள் முடிந்து டிபன் சாப்பிடக் கிளம்பிய நந்தகுமாருக்குள் சதா இப்படித்தான் கேள்விகளும் பதில்களும் ஓடியபடி இருக்கும்.

இந்த ஹைடெக்யுகத்திலும் நாயுடு ஹோட்டலில் ஒரு பூரி செட் ஐந்து ரூபாய்க்கும், ஒரு இட்டிலி ஒரு ரூபாய் இருபத்து ஐந்து காசுக்கும் கிடைப்பது ஆச்சரியம்தானே?

அதுவும் நல்ல ருசியோடு...!

நாலு இட்லி, ஒரு பூரி, ஒரு காபிக்கு பதின்மூன்று ரூபாய்தான்.



இதே வேறு ஹோட்டலாக இருந்தால் முப்பது முப்பந்தைந்து ரூபாய் பழுத்துவிடும்.

நாயுடுவுக்கு எப்படித்தான் கட்டுப்படி ஆகிறதோ?

நந்தகுமார் சாப்பிட வந்தபோது நல்ல கூட்டம். பல சமயங்களில் நின்று கொண்டே சாப்பிட வேண்டியிருக்கும். நந்துவும் சாப்பிட்டிருக்கிறான். இன்றும் அதே நிலைதான்...

நாயுடு ஒரு தட்டில் இட்லி பூரியை ஒரு சேரப்போட்டு நீட்டினார். ஒரு ஓரமாய் நின்று சாப்பிடும் போதுதான் சுவரில் அந்த யந்திரத்தைக் கவனித்தான்.

புதிதாக மாட்டப்பட்டு மல்லிகைப் பூவெல்லாம் போடப்பட்டிருந்தது.

''நாயுடு.. அது என்ன சுவத்துல?''

''யந்திரம் நந்து!''

''யந்திரம்னா...?''

''என்னய்யாநீ... யந்திரம் தெரியாதாக்கும்?''

''தெரிஞ்சா எதுக்கு கேக்கறேன்?''

''அது யந்திரம். அவ்வளவுதான் எனக்கும் தெரியும். அதை கடைல வெச்சு ஊதுபத்தி காட்டினா வியாபாரம் நல்லா நடக்கும்னு ஒருத்தர் சொல்லிக் கொடுத்தாரு. அதான் மாட்டி வெச்சிருக்குறேன்.''

''யந்திரம்னா மெஷின்னு கேள்விப்பட்டிருக்கேன். இது ஏதோ தகடு மாதிரி இருக்குது. இதை யந்திரம்கறே. கும்புட்டா வியாபாரம் நல்லா நடக்கும்கறே... புரியலியே.''

''அதுக்கு நான் என்ன பண்ண... ஒண்ணு மட்டும் நிச்சயம். அதை மாட்டுனதுல இருந்து வியாபாரம் பிச்சுக்கிட்டு போகுது.''

''மொட்டத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடறியே நாயுடு.''

''தா... எனக்கு நிறைய வேலை இருக்குது. ஆளவிடு.''

- நாயுடு அவனிடம் இருந்து வெட்டிக் கொண்டு அடுத்த ஆளிடம் போய்விட்டார்.

ஆனால் அவன் பார்வை என்னவோ யந்திரத்தின் மேலேயே இருந்தது. 'இது எப்படி வியாபாரத்தை அதிகரிக்க வைக்கும்?''

கேள்வி பிறாண்டியது.

பக்கத்தில் இன்னொருவர்.

''ஆமா... நீங்க என்ன நாத்திகவாதியா?''

''எதுக்கு கேக்கறீங்க?''

''யந்திரத்தைப் பத்தி இவ்வளவு எளப்பமா கேள்வி கேக்கறீங்க?''

''எளப்பமா இல்லீங்க. தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன். இதுவோ செப்புத்தகடு. இது எப்படி வியாபாரத்துக்கு உதவி செய்யும்? நான் இங்க சாப்பிட வந்தது நல்ல ருசியைப் பார்த்துத்தான்... யந்திரத்தைப் பார்த்து இல்லை.''

''அது சரி... ஆனா நல்ல ருசிஇங்கே இருக்கவே இந்த யந்திரம்தான் காரணம்னு நான் சொல்றேன்.''

''இது என்ன புதுக்கதை?''

''கதை இல்லை தம்பி... அதுதான் சூட்சமம். இதுக்கே இப்படி சந்தேகப்படறீங்களே. நாறு வயசாயியும் ஒரு அம்மா இன்னும் இருபது வயசுப் பொம்பளையாவே இருக்காங்க. அதைப் பார்த்தா என்ன சொல்வீங்க?''



- அவர் அவனுக்குத் தேவையான பரபரப்பான சேதி ஒன்றுக்கு பிள்ளையார் சுழி போட்டார்.

''எங்க... யார் அது?''

''பஞ்சமூர்த்தி மலை தெரியுமா?''

''கேள்விப்பட்டிருக்கேன்.''

''அங்க போய் பர்வதம்மா பத்தி கேளுங்க. சொல்வாங்க.''

''நிஜமாவா?''

''நான் அவங்கள முப்பது வருஷமா பாத்துக்கிட்டு வரேன். காத்தால பூத்த மாதிரி அப்படி இருக்காங்க. அவங்கதான் இந்த எந்திரத்தை நாயுடுவுக்கும் தந்தவங்க...''

''அப்ப பஞ்சமூர்த்தி மலைக்கு போனா அவங்களப் பாக்கலாமா?''

''தாராளமா... ஆனா பக்தியோட-நம்பிக்கையோட போகணும். நோண்டிப் பாக்க போனா அவங்களப் பாக்க முடியாது. அப்படி போறவங்களும் உதை வாங்காம திரும்பினதில்லை!''

-ஒரு வடையை விண்டு வாயில் போட்டபடி அந்த மனிதர் சொன்னது நந்தகுமாரை ஒரு கிறுக்கு கிறுக்கியது.

இட்லி, பூரியை அள்ளி எறிந்தான்.

வேகமாய் கை கழுவிவிட்டு வெளியில் வந்தான். ஒரு டெலிபோன் பூத்துக்குள் நுழைந்து எண்களைச் சுழற்றி மறுமுனையில் ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியர் பழனிக்குமார் என்பவரைப் பிடித்தான்.

''பழனிக்குமார் சாரா?''

''ஆமாம்... யாரு நந்தகுமாரா?''

''ஆமாம் சார்... ஒரு முக்கியமான விஷயம்.''

''என்ன... நடிகை நளினிகுமாரி வீட்டுக்கு முதல்வர் சாப்பிடப் போனதப்பத்தி எதாவது தகவல் கிடைச்சிருக்கா?''

''சார் அதெல்லாம் லோக்கல் நியூஸ். இது பயங்கர பூ சுத்தல் சமாச்சாரமா இருக்கு''.

''என்ன... பின்லேடன் இங்க வீரப்பனோட காட்டுல கூட்டணி அமைச்சுக்கிட்டிருக்கானாமா?''

''அதெல்லாம் இல்லை சார்... பஞ்சமூர்த்தி மலைல பர்வதம்மான்னு ஒரு லேடி நூறு வருஷமாகியும் இருபது வயசு இளமையோடையே இருக்காங்களாம்.''

''நம்ம ஊர் நடிகைங்க மாதிரியா?''

''விளையாடாதீங்க சார். இதுக்கு பின்னாடி நிறைய இண்டரஸ்டிங் தகவல் இருக்குன்னு நான் நினைக்கறேன்.''

''ஒரு புடலங்காயும் இருக்காது. பிரேமானந்தா வாயில லிங்கம் எடுத்த மாதிரி எதாவது உல்டாவா இருக்கும்.''

''உல்டாவோ கில்டாவோ... வித்தியாசமான செய்திதானே?''

''அதுல என்ன சந்தேகம்? இப்ப அதுக்காக பஞ்சமூர்த்திமலைக்கு போகப் போறியாக்கும்?''

''ஆமாம் சார். போட்டோ கிராபர் மணியனைக் கொஞ்சம் அனுப்பித்தாங்க சார்.''

''ஜமாய் கண்ணா. இப்பவே மணியனை சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டுல உன்னைப் பாக்கச் சொல்றேன். அந்த பர்வதம்மாவை உண்டு இல்லைனு பண்ணிடு.''



''அதெல்லாம் என்பாடு சார். மேட்டர் படு சூடான மேட்டர். பேமெண்ட் கொஞ்சம் பாத்துப் போடுங்க சார்.''

''முதல்ல மேட்டரை முடி. அப்புறம் பார்ப்போம்.''

-பழனிக்குமார் அவனுக்குள் மறை முகமாய் ஊக்கம் தர நந்தகுமாரும் பஞ்சமூர்த்தி மலைக்குப் புறப்படத் தயாரானான்.

வெளியில் வந்தான். ஆட்டோ ஒன்றைப் பிடித்து ஏறி அமர்ந்தான்.

''சென்ட்ரல் பஸ்ஸ்டாண்டுக்கு போங்க!''

ஆட்டோவும் புலித்தனமாய் உறுமியபடி புறப் பட்டது.

## 2

**ப**ஞ்சமூர்த்திமலை!

சிலுசிலு வென்ற பாரமான காற்று, வெண்ணிற பனிப்போர்வைக்கு கீழே பசுமையான காடுகள்-என்று மலைகளுக்கேயுரிய இலக்கணம் மீறாமல் ஊர் எல்லையில் 'பஞ்சமூர்த்தி மலை உங்களை வரவேற்கிறது' என்கிற முகப்புப் பலகையுடன் இருக்க, அந்த பலகை மேல்கூட நான்கைந்து செம்போத்துப் பறவைகள் உட்கார்ந்திருந்தன.

வளைந்து மேலேறும் பஸ்ஸில் குளிருக்குப் பயந்து கொண்டு பலரும் ஷட்டரை இறக்கிவிட்டிருந்தாலும் நந்தகுமார் மட்டும் தனக்கருகே உள்ள ஷட்டரை இறக்காமல் வெளியே பார்த்தபடி வந்தான்.

பக்கத்திலேயே ஒரு மலைவாசி வேட்டியை அவிழ்த்துப் போர்த்திக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

ஷட்டரை இறக்கிவிட அவர் முயன்ற போதெல்லாம் தடுத்து வெளியே பார்த்துக் கொண்டே வந்தான் நந்தகுமார்.

''இறக்கி விடுங்க தம்பி...கூதைக் காத்து அப்பால சலதோஷத்துல பிடிச்சு தள்ளிப்பிடும். மலைப்பனி மார்புல சளிக்கூடு கட்டிப்பிடும்...'' என்று சொல்லிப் பார்த்தார்.

''இருக்கட்டும்... எனக்கு ஒண்ணும் ஆகாது'' என்றவனுக்கு அந்த மலையின் அழகு மிகப் பிடித்துவிட்டது.

''ஆமா இப்பதான் முதல் முதலா வர்றீங்களா?'' அவர்தான் கேட்டார்.

''ஆமாம்...''

''என்ன விஷயமா வர்றீங்க...?''

யதார்த்தமாய்த்தான் கேட்டார்.

''பர்வதம்மாளைப் பாக்கறதுக்கு'' - சொல்லிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தான். அதில் கடுக்கென்று ஊசி ஏறின மாதிரி ஒரு மாற்றம்.

''அவங்க ரொம்பஃபேமஸாம்ல?''

''அவுகளை எதுக்குப் பாக்கணும் நீங்க...?''

''குறி சொல்றவங்கள எதுக்குப் பார்ப்பாங்க?''

''எனக்கு தெரிஞ்சு இப்ப அவங்க யாருக்கும் குறி சொல்றதில்லையே!''

''அப்படியா...!''

''பல வருசமாவே அவங்க குகையைவிட்டும் வெளிய வர்றதுமில்ல!''



''அவங்க அப்ப குகைலயா இருக்காங்க?''

''ஆமாம்...இதெல்லாம் தெரியாதா உங்களுக்கு?''

''தெரிஞ்சுக்கத்தான் வந்துருக்கேன்.''

''பேசாம திரும்பிப் போயிருங்க. ஊர்க்காரங்க நாங்களே அந்த குகைப்பக்கம் போவுறதில்லை.''

''எதனால அப்படி?''

''அவுக ஒரு மாதிரி. அவங்களா எப்பவாச்சும் ஊருக்குள்ள இருக்கற பொன்னியம்மன் கோவிலுக்கு வருவாங்க. அப்ப பார்ப்போம். மத்தபடி அவுகள பாக்க யார் எதுக்காக போனாலும் அவங்க திருப்பி அனுப்பிடறாங்க. குகையைவிட்டு வெளியவே வர்றதில்லை.''

-ஓடும் பஸ்ஸிலேயே ஓரளவு விஷயம் கிடைத்தது. பஸ்சும் பஞ்சமூர்த்தி மலையின் உச்சியில் ஒரு சின்ன மைதானம் போல் உள்ள இடத்தில் ஆசுவாசப்பட்டு நின்று எல்லோரையும் உதிர்த்துவிட்டது.

நந்தகுமாரும் இறங்கினான்.

எதிரில் ஒரு பெட்டிக்கடை!

கடைக்காரன் கறுப்புப் போர்வை ஒன்றுக்குள் பதுங்கியிருந்தான். உதட்டில் பீடியும் புகையும்.

நந்தகுமாரும் கடைமுன் போய் நின்றான்.

''கோல்ட் ஃப்ளேக் சிகரெட் ஒரு பாக்கெட்...'' என்றபடி ஐம்பது ரூபாயை நீட்டினான்.

''சில்ற இல்லையே தம்பி... அதோட கோல்ட்ஃப்ளேக் சிகரெட்டும் இல்ல. இங்க கத்திரி சிகரெட் தான் கொஞ்சம் விக்கும். மத்தபடி பூக்கூடை பீடிக்குதான் கிராக்கி.''

''சரி சிசர் சிகரெட்டை கொடுங்க...''

''சில்ற இல்லியே...''

''பரவால்ல...நான் அப்புறமா வாங்கிக்கறேன்.''

''தம்பி யார் ஊட்டுக்கு வந்துருக்கீங்க?''

''யார் வீட்டுக்கும் வரலை. பர்வதம்மாளை பார்க்கத்தான் வந்துருக்கேன்.''

-நந்தகுமார் சொன்ன மறுநொடி கடைக்காரன் முகத்திலும் மாற்றங்கள்.

''ஏன்...அவங்கள பார்க்க முடியாதா?''

''அப்படித்தான் சொல்லிக்கிறாங்க.''

''அவங்க ஏதோ ஒரு குகைலதான் இருப்பாங்களாம்னு கேள்விப்பட்டேன். அந்த குகைக்கு எப்படி போகனும்?''

''வேணாம் தம்பி. திரும்பிப்போயிடுங்க. எதுக்கு வம்பு?''

''இதுல என்ன வம்பு இருக்குது... அவங்களப் பாத்து கும்புடத்தான் வந்துருக்கிறேன்.''

''எதுக்கு வந்திருந்தாலும் சரி. அவங்களப் பாக்க முடியாது. போனவாரம்கூட ஒருத்தர் வந்து குகைக்கு போய் வெளியவே காத்துக் கிடந்தார். அம்மா வெளிய வரவேயில்லை. பொறுமை இழந்து உள்ளாரயே போய்ட்டார். அம்மா கோவிச்சுக்கிட்டு 'உன் கண்ணு அவிஞ்சு போக'ன்னு சாபம் கொடுத்துட்டாங்க!''

-கடைக்காரன் ஒரு மாதிரி பயமுறுத்தினான்.

''அப்புறம் என்ன ஆச்சு... அவர் திரும்பிட்டாரா?''

''திரும்பினது மட்டுமா... அவருக்கு கண்ணுமுல்ல போயிடிச்சு.'' - நந்தகுமாருக்கு பகீர் என்றது.



''நிஜமாவா சொல்றீங்க...?''

''அட என்னங்க நீங்க... எங்க ஊர் பொன்னியம்மன் கோவிலுக்குப் போய்ப்பாருங்க. அந்த ஆள் அங்கதான் இருக்காரு. அந்த ஆளைப் பார்த்து ஊரே அரண்டுபோய் டெக்குது. நீங்க என்னன்னா...?''

''சரி கோவிலுக்கு எப்படி போகனும்?''

''இப்படியே நேரா போங்க-கூப்புடு தூரத்துலதான் கோவில். பாத்தாலே தெரியும்.''

''ஆமா...இங்க டெலிபோன் பூத் இருக்கா?''

''தனியா இல்லீங்க. போஸ்ட் ஆபீஸ்ல ஒண்ணு இருக்குது. செவ்வா, வெள்ளி கோவிலுக்கு நல்ல கூட்டம் வரும். வெளியூர்ல இருந்தெல்லாம் கூட வருவாங்க. அப்ப போஸ்ட் மாஸ்டர் திறந்து வெச்சுருப்பாரு. மத்த நாள்ல மூடித்தான் இருக்கும்.''

''ஒரு அவசரம் ஆத்திரம்னா...?''

''போஸ்ட் மாஸ்டர் வீட்டுக்குத்தான் போகனும். வீட்ல இருந்தா வந்து திறந்து விடுவாரு.''

-கடைக்காரன் சொன்ன விஷயங்களை அசைபோட்டபடியே நடக்க ஆரம்பித்தான் நந்தகுமார்.

சிறிய ஊர்தான்!

அங்கங்கே சில சென்ட்ரிங் வீடுகள். பெரும்பாலும் நாட்டு ஓடு வேய்ந்த வீடுகள். வீட்டு முகப்பில் பாரபட்சம் இல்லாமல் வளர்ந்திருக்கும் முருங்கை மரங்கள். அதில் வாலில் பிடி போட்டுத் தொங்கும் பச்சைப் பாம்பு கணக்காய் அதிக பருமன் இல்லாத காய்கள். காற்றில் அது ஆடுவதுகூட சற்று பயமூட்டும் விதமாகத்தான் இருந்தது.

எதிரில் வித்தியாசமாக - கழுத்தில் வேட்டியை முடிபோட்டு மார்பை மறைத்தபடி நடக்கும் மலை ஜாதிப் பெண்களும் போர்வையால் உடம்பே தெரியாதபடி மறைத்துக் கொண்டு பீடி பிடித்தபடி நடக்கும் ஆண்களுமாய் பஞ்சமூர்த்தி மலை வித்தியாசமாகத்தான் இருந்தது.

ஊரில் பார்த்த மனிதர் எதை வைத்து பர்வதம்மாளை சகஜமாய் பார்க்க முடியும் என்கிற மாதிரி சொன்னார் என்பதும் மனதில் இடித்தது.

அவளது இளமை ரகசியத்துக்கு விடை தேடி வந்தால் இங்கே வேறு ஏதேதோ மர்மங்கள் மண்டிக்கிடக்கின்றன.

நந்தகுமாருக்கு கொஞ்சம் குழப்பமாகக்கூட இருந்தது. முதலில் அந்த குருட்டு மனிதரைப் பார்த்துப் பேசினால்தான் ஒரு வழி கிடைக்கும் போலவும் தோன்றியது.

யோசனையோடு நடப்பவனின் ஒரு பக்க தோளில் கேமரா. ஒரு வாரமாய் தோய்க்காத ப்ளூ கலர் ஜீன்ஸ் பேண்ட். எவ்வளவு அழுக்குப்பட்டாலும் வெளிகாட்டாத அரக்கு வண்ண டி ஷர்ட்!

இதனால் உடம்பில் குளிரின் தாக்கம் தெரியவில்லை. ஆனால் காதுமடல் கற்பூர வல்லி இலை கணக்காய் விடைத்துப் போய் குளிரால் அவன் முகத்தில் சுருக்கத்தை உருவாக்கப் பார்த்தது.

கையை பரபரவென்று தேய்த்து விட்டுக் கொண்டு தொடர்ந்து நடந்தான்.

நிச்சயம் வித்தியாசமான விஷயங்கள் நிறைய கிடைக்கப் போவதாக உள்ளுணர்வு சொன்னது.



வடக்கில் சோமன் தத்தா என்று ஒரு ஃப்ரீலான்ஸ் ரிப்போர்ட்டர். கங்கையாற்றங்கரையில் உள்ள ஒரு கிராமத்தில் காபாலிகர்கள் என்னும் பிணம் தின்னிச் சாமியார்கள் பற்றிக் கேள்விப்பட்டு அவர்களை சந்திக்கச் ளசென்று அவர்கள் பிணம் தின்னும் போது புகைப்படம் எடுத்து, அவர்களையும் பேட்டி கண்டு எழுதிய கட்டுரை அவன் ஞாபகத்திற்கு வந்தது.

அதன்பின் கட்டுரையை வெளியிட்ட பத்திரிகையே அவருக்கு தன் நிறுவனத்தில் முப்பதாயிரம் சம்பளத்தில் வேலை போட்டுக் கொடுத்துவிட்டது.

இதே கதைதான் கல்கத்தாவிலும்... ராஜன் கானர்ஜி என்னும் ரிப்போர்ட்டர் காளிக்கு நரபலி கொடுக்கும் மூடப் பழக்கத்தைப் பற்றி கேள்விப்பட்டு மிகச் சாதுர்யமாக ஒரு கட்டுரை செய்தார். அதன்பின் அவரே ஒரு பத்திரிகை நடத்தும் அளவு பெரிய ஆளாக மாறினார்.

தனக்கும் அப்படி ஒரு அதிர்ஷ்டம் அடிக்குமா?

கேள்விப் பந்துகளை தட்டிக் கொண்டு நடந்தவன் கண்ணில் போஸ்ட் ஆபீஸ் பட்டது.

போனால் போகிறது என்று ஒரு சின்ன பெயர் பலகை. நல்லவேளையாக உள்ளே போஸ்ட் மாஸ்டர் இருந்தார். அவரைப் பார்க்கவும் உதவி ஆசிரியர் பழனிக்குமார் ஞாபகம் வந்தது.

அவருக்கு போன் செய்து இங்கு கேள்விப்பட்ட விஷயங்களைச் சொன்னால் என்ன என்று தோன்றியது.

உள்ளே நுழைந்தான்.

போஸ்ட் மாஸ்டர் படுஹோம்லியாக வேஷ்டி பனியனில் இருந்தார். தபால் பை ஒன்று அவன் வந்த

பஸ்ஸிலேயே வந்திருந்தது. அதன் அரக்கு சீலை உடைத்து பையைத் திறந்து கொண்டிருந்தார்.

''குட்மார்னிங் சார்...'' -நந்தகுமாரின் குரலுக்கு திரும்பினார்.

''*STD* கால் ஒண்ணு பண்ணனும்.''

''எந்த ஊர் நீங்க?''

''சென்னை!''

''போட்டோகிராபரா...?''

''பத்திரிகைக்கு எழுதற ஃப்ரீலான்ஸ் ரிப்போர்ட்டர்.''

''பண்ணிக்குங்க...'' - பதிலோடு தொலைபேசியை காட்டினார்.

நந்துவும் எண்களைத் தட்டி பழனிக்குமாரை பிடித்தான்.

''குட்மார்னிங் சார்... நந்தகுமார் பேசறேன்!''

''சொல்லுய்யா... எங்க இருந்து பேசறே!''

''பஞ்சமூர்த்தி மலைல இருந்து.''

''அங்க டெலிபோன்லாம் இருக்கா...?''

''ஒரே ஒரு போன்... அதுவும் போஸ்ட் ஆபீஸ்ல-அங்க இருந்துதான் சார் பேசறேன்.''

''சரி சொல்லு...''

''நான் உங்கக்கிட்ட சொன்னதைவிட மிரட்டலா இருக்கு சார் விஷயங்கள்.''

''எப்படி?''

''பர்வதம்மா இப்ப அருள்வாக்கெல்லாம் சொல்றதில்லையாம். ஒரு குகைலதான் இருக்காங்களாம். யாரும்

37671



அவங்கள பார்க்க முடியாதாம். மீறி பார்த்தா தோசத்துல சபிச்சுட்றாங்களாம். அப்படி ஒரு நபரை சபிச்சு அவருக்கு கண் பார்வை போயிட்டதா சொல்றாங்க.''

''அட்றாசக்கைன்னானாம்... அப்புறம்?''

''நான் இப்ப அந்த கண் போன மனுஷரைப் பார்க்கத்தான் போறேன்.''

''பாரு...பாரு... விஷயங்களை ஷார்ப்பா கவனி. ஏடாகூடமா எதாவது இருக்கும்.''

''அப்படித்தான் நானும் நினைக்கறேன். கஷ்டமான அசைன்மென்ட் சார். நம்ம பத்திரிகையை நம்பித்தான் இறங்கியிருக்கேன்...''

''நீ என்ன சொல்லவரே...உன் கட்டுரையைப் பிரசுரம் பண்ணுவோமா மாட்டோமான்னு டவுட்டா இருக்கா உனக்கு?''

''அப்படி இல்ல சார். இந்த அசைன்மென்ட்டைப் பண்ணும்போது எனக்கு எதாவது ஆயிட்டா எங்களுக்கு எதுவும் தெரியாதுன்னு நீங்க சொல்லிடக்கூடாது சார்.''

''என்ன பயப்பட்றியா?''

''இல்ல சார்... இது ஒரு எச்சரிக்கை.''

''சாரி நந்து... நீ எங்க ஸ்டாஃப் ரிப்போர்ட்டர் இல்ல. நீ உன் சொந்த விருப்பத்துலதான் இதை எல்லாம் செய்யறே. அப்படிச் செய்யும்போது ஆபத்து எதுவும் ஏற்பட்டா அதை நீ சந்திச்சு ஜெயிக்கத்தான் வேணும். இப்படி எங்ககிட்ட புலம்பக்கூடாது.''

''புலம்பலே சார்... நான் எடுக்கற ரிஸ்க்கோட டெப்த்தை சொல்றேன். ஆர்ட்டிகளை அதுக்குண்டான வேல்யூவோட கவர்ஸ்டோரியாவே போடணும் சார்.''

''கல்யாணமே ஆகலை. அதுக்குள்ள குழந்தைக்கு என்ன பேர்வைக்கலாம்கற மாதிரி அபத்தமா பேசறியே. தைரியமா இறங்கி செயல்படுய்யா. எந்த நல்ல விஷயத்தையும் எந்த ஒரு பத்திரிகையும் சும்மாவிடாது. நான் பாத்துக்கறேன்.''

''தேங்க்யூ சார்... அது போதும் சார்!''-நந்து ரிஸீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

போஸ்ட் மாஸ்டர் வெறித்தபடி இருந்தார்.

''எவ்வளவு சார் ஆச்சு?''

''அது இருக்கட்டும். நீங்க பர்வதம்மா விஷயமா கட்டுரை பண்ண வந்திருக்கீங்களா?''

''ஆமாம் சார்... அவங்களப் பத்தி கேள்விப் பட்டுத்தான் வந்திருக்கேன்.''

''வேண்டாம் தம்பி. திரும்பிப் போயிடுங்க.''

''என்ன சார் நீங்களும் அதே பல்லவியைப் பாடறீங்க...''

''அப்ப இதுக்கு முந்தியே பலர் எச்சரிக்கை பண்ணியிருக்காங்களா?''

''ஆமாம்... எல்லாமே ரொம்ப ஆச்சரியமா இருக்கு. இந்தக் காலத்துல இப்படியான்னு அதிர்ச்சியாவும் இருக்கு.''

''ஆச்சரியமும் அதிர்ச்சியும் எந்த விஷயத்துலதான் இல்ல... சொல்லுங்க பார்க்கலாம்''.

''என்ன அப்படி சொல்றீங்க... நூறு வயசாகியும் ஒருத்தர் இருபது வயசு மாதிரியே இருக்காங்கன்னா அது சாதாரண விஷயமா?''



''யோகத்துல அதெல்லாம் ரொம்ப சாதாரண விஷயம் தம்பி.''

''அதுசரி... நீங்க பர்வதம்மாவை பாத்துருக்கீங்களா?''

''இதே ஊர்ல இருக்கேன். பார்க்காம இருப்பேனா... பாத்துருக்கேன்.''

''உங்களுக்கு ஆச்சரியமா இல்லை?''

''ஆச்சரியமாத்தான் இருக்கு. ஆச்சரியப்பட்டுக்கற தோட நிறுத்திக்க வேண்டியதுதான்!''

''எப்படின்னு சந்தேகமா இல்லையா?''

''சந்தேகப்பட்டா சாகவேண்டியதுதான்...''

''அங்கதான் எனக்கு உதைக்குது. அப்படி என்ன அது தெரிஞ்சுக்க கூடாத ஒரு விஷயம்?''

''பொதுவுல நதிமூலம் ரிஷிமூலம் பார்க்கக் கூடாதுன்னு சொல்வாங்க. பார்த்தா எப்பவுமே ஆபத்துதான்.''

''எப்படி சார்... எப்படி இவ்வளவு பெரிய விஷயத்தை சாதாரணமா எடுத்துக்கிட்டு சும்மா இருக்கீங்க?''

''எங்களுக்கெல்லாம் உயிர் மேல ஆசை இருக்கு. உங்களுக்கு இல்லேன்னா போங்க. போய் அனுபவியுங்க.''

-போஸ்ட் மாஸ்டர் விட்டேத்தியாக பதில் சொல்லிவிட்டு வந்த கடிதங்களுக்கு முத்திரை குத்த ஆரம்பித்தார்.

அவனுக்குள் பூச்சி பறந்தது.

அவர் திட்டமிட்டு மிரட்டுகிறாரா... இல்லை சாதாரணமாக சொல்கிறாரா என்பதே குழப்பமாக இருந்தது.

## 3

பொன்னியம்மன் கோவில் ஒன்றும் அத்தனை பெரிதாக இல்லை. சாதாரண கோவில் தான்! ஒரு இருபதடி உயர கோபுரம். கோவிலைச் சுற்றி காவிப் பட்டையடித்த மதில் சுவர். முகப்பில் தட்டில் தேங்காய் பழங்களை பரத்தி வைத்துக் கொண்டு சில கடைகள்.

நந்தகுமார் கோவிலை ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டான், உள்ளே நடந்தான். கூட்டமே இல்லை. எங்கே அந்த குருட்டு மனிதர்? பார்வை துழாவியது. உள்ளே ஒரு தூணுக்கு அருகில் கையில் தடியுடன் அமர்ந்திருந்தார். கண்ணுக்கு பெரிதாய் கட்டு போட்டிருந்தார். நெருங்கினான்.

''வணக்கம்ங்க... நீங்கதான் பர்வதம்மா சாபத்தால கண்ணைப் பறி கொடுத்தவரா?''

-அவர் உடனே தடுமாறிக் கொண்டு எழுந்து ''கேள்வி கேக்கற நீங்க யாரு?'' என்றபடி சற்று முன்னால் வந்தார்.

''எனபேர் நந்தகுமார். நான் ஒரு ஃப்ரிலான்ஸ் பத்திரிகை ரிப்போர்ட்டர். உங்களைப் பத்தி கேள்விப் பட்டேன். அதான் பாக்க வந்தேன்.''

''நல்லது... சாமிதரிசனம் பண்ணிட்டீங்களா?''

''இல்ல... இனிமேதான் பண்ணனும்.''

'போங்க... போய் சாமியை கும்புட்டு வாங்க. பொறவு பேசலாம்.''

''பரவால்ல... நீங்க சொல்லுங்க. நான் அப்புறமா சாமி கும்புட்டுக்கறேன்.''

''தப்பு பண்றீங்க. பொன்னியாத்தா ரொம்ப சக்தி வாஞ்சவ. அவளைக் கும்புடாம இங்க எதையும் யாரும் செய்ய மாட்டாங்க. அது தெரியாம அலட்சியமா இருந்துதான் எனக்கு இப்படி ஆயிடிச்சு.''



- அவர் கொஞ்சம் போல பதறினார்.

''சரி... நீங்க இங்கையே இருங்க. நான் போய் தரிசனம் பண்ணிட்டு வந்துடறேன்.''

நந்தகுமார் சற்று பின் சென்று அவரையும் ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டான். பிறகு பிராகாரத்தில் நடந்து சிறிய பீடம் கடந்து சன்னதி முன் போய் நின்றான்.

சன்னதி திறந்திருந்தது. பூசாரியைக் காணவில்லை. உள்ளே பொன்னியம்மன் ஒற்றை சாமந்தி மாலையோடு தேஜோமயமாய் அமர்ந்திருக்க அருகில் தடிமனான சுடர் விளக்கு.

நந்தகுமார் உற்றுப்பார்த்தான். திருட்டுத்தனமாய் சாமி கும்பிடுகின்றவர்களைப் போல அரைக்கை கூப்பி கன்னத்திலும் போட்டுக் கொண்டான்.

பூசாரி எங்கோ வெளியே போயிருந்தவரைப் போல அப்பொழுதுதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

நந்தகுமாரைப் பார்த்துவிட்டு அரைச் சிரிப்பு சிரித்தார்.

''தம்பிக்கு வெளியூருங்களா?''

''ஆமாம்... மெட்ராஸ்.''

''சென்னைன்னு சொல்லுங்க. கேமரா வெச்சிருக் கீங்களே போட்டோ கீட்டோ எடுத்துப்புட்டீங்களா?''

''இல்லை... இனிமே நீங்க அனுமதிச்சா எடுத்துக் கறேன்.''

''தப்பு தம்பி. அது ரொம்ப தப்பு. ஆத்தா பொல்லாதவ. அவளுக்கு இதெல்லாம் புடிக்காது.''

''அப்படின்னு ஆத்தா வந்து உங்கக்கிட்ட சொன்னாளா?''

- பட்டென்று நந்தகுமார் திருப்பிக் கேட்க, ஒரு விநாடி பூசாரி தடுமாறி விட்டார். பிறகு சுதாரித்து, ''என்ன தம்பி இது கேள்வி... ஆமா உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா இல்ல சும்மா சுத்திப் பார்க்க வந்தீங்களா?''

- அவர் கேள்வியில் அவன் ஒரு நாத்திகன் என்கிற தீர்மானம்.

''கடவுள் நம்பிக்கைக்கும் என் கேள்விக்கும் என்னங்க சம்மந்தம்?''

''இல்லையா பின்ன... நீங்க திருப்பதியிலையோ பழனியிலையோ போய் படம் புடிப்பீங்களா... உடுவாங்களா அங்க?''

''அப்ப அவங்க விடமாட்டாங்க. அதனால நீங்களும் விட மாட்டீங்க... அப்படித்தானே?''

''அப்படி இல்லை... அதுதான் ஐதீகம். அதனால அப்படிச் சொன்னேன்.''

''ஆத்தாளுக்கு பிடிக்காதுன்னு அப்ப எதை வெச்சு சொன்னீங்க?''

''சரிதான்... விடமாட்டீங்க போல இருக்குதே. சாமி கும்புட்டுக்கறதா இருந்தா கும்புட்டுக்குங்க.'' - அவர் கருவறைக்குள் நுழைந்து கற்பூரத்தட்டை எடுத்து ஆரத்தி காட்டினார். நந்தகுமாரும் புத்திசாலித்தனமாக க்ஷணத்தில் அதீத பக்திமான் போல மாறி கைகளைக் கூப்பி வணங்கினான். திரும்பி வந்து குங்குமம் தரும்போது தட்டில் ஒரு ஐம்பது ரூபாயைப் போட்டான்.

பூசாரிக்கு வாயெல்லாம் பல்லாகிவிட்டது.



''தம்பி பாக்கத்தான் பலாப்பழம் மாதிரி முள்ளா தெரியறீங்க. ஆனா சுளையாட்டம் மனசு இருக்குது.''

- நந்தகுமார் ஐம்பது ரூபாயின் மகிமையை நினைத்து ஒரு சிரிப்பு சிரித்தான். பின்,

''உங்கக்கிட்ட ஒண்ணு கேக்கலாமா?'' என்று ஆரம்பித்தான்.

''ஒண்ணென்ன ஒராயிரம் கேளுங்க. தெரிஞ்சதைச் சொல்றேன்.''

''நீங்க இந்த பஞ்ச மூர்த்தி மலையிலயே பிறந்து வளர்ந்தவரா?''

''ஆமா... நாமட்டுமா...? பதினாலு தலைமுறையா எங்க குடும்பத்துக்கே இதுதானே ஊரு... ஆத்தாதானே எங்களுக்கு படியளக்கறவ!''

''அப்ப ரொம்ப சக்தி வாய்ந்த சாமின்னு சொல்லுங்க.''

''அதுல என்ன சந்தேகம். இவளைக் கும்புட்டு எதைக் கேட்டாலும் கொடுப்பாளே!''

''அப்ப நீங்க எதையுமே இதுவரை கேட்டதில்ல மாதிரி தெரியுதே?''

''நீங்க கேக்கறது புரியல எனக்கு...''

''இல்ல... கேட்டா கேட்கறத தர்ற சாமியை வெச்சுக்கிட்டு இப்படி மணி ஆட்டிக்கிட்டு பொழுதை கழிச்சுக்கிட்டிருக்கீங்களே அதைச் சொன்னேன்...''

''விளையாட்டா பேசறீங்க. நாங்க எதுக்கு கேக்கணும்? கேக்காமலேதான் அவ கொடுத்துட்றாளே... இப்பக்கூட பாருங்க ஊட்டுல என் பேத்திக்கு மேலுக்கு முடியலை. மருத்துவன் கிட்ட காட்டணும்னா அம்பது ரூவா ஆகும்னு என்மக சொன்னா. இதோ இப்ப நீங்க கொடுத்துட்டீங்க.''

- பூசாரி சொல்லி விட்டுச் சிரித்தார்.

''அது சரி... இவ்வளவு சக்தி படைச்ச சாமி உள்ள ஊர்ல பர்வதம்மாங்கறவங்களை எல்லாரும் சாமியா நினைச்சு கும்புட்றாங்களே... அது எதனாலங்க?''

- நந்து விஷயத்துக்கு வந்தான். பூசாரி முகம் உடனே இருட்டு கட்டியது. சட்டென்று வார்த்தைகள் வரவில்லை.

''என்ன பூசாரி பதிலக் காணோம்?''

''இல்ல... நீங்க எதுக்கு கேக்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''சும்மாதான்... என் மனசுல தோணிச்சு. கேட்டேன்.''

''நல்லது தம்பி. என் வரைல அது மூலமாகதான் இந்த ஆத்தா பேசறா. இவ நித்ய கன்னி. இவளைக் கும்புட்ற அவுகளும் நித்ய கன்னியாகவே இருக்காங்க.''

''அவங்கள பாக்க முடியாதுங்கறாங்களே...?''

''என்னான்னு தெரியல தம்பி. முந்தியெல்லாம் ஆத்தா சகஜமா எல்லாருக்கும் அருள்வாக்கு சொல்லிக்கிட்டுத்தான் இருந்துச்சு. இப்பதான் வெளியவே வரமாட்டேங்குது.''

''ஏன்னு தெரியலியா?''

''ஆத்தா விஷயம். நமக்கு என்ன தெரியுமா?''

''இப்படி சொன்னா எப்படிங்க? நான் அவங்கள பாக்கத்தான் வந்துருக்கேன். ஆனா பார்த்தா பார்வை போயிடும் அப்படி இப்படின்னு சொல்லி எல்லாரும் பயமுறுத்தறாங்க...''

''அதுவும் நெசம் தான். பாருங்க அங்க ஒருத்தர் உக்காந்திருக்காரே, அவரு இப்படித்தான் ஆத்தாவை பாக்க குகைக்குப் போய் பார்வை போயிடுச்சு. இப்ப கண்ணுக்கு



மருந்து வெச்சு கட்டிக்கிட்டு இங்கையே தவம் கிடக்கறாரு...''

''அப்படி என்ன அவர் பாக்கக் கூடாததை பார்த்துட்டாரு?''

''அதை எல்லாம் நாம கேக்க முடியாது. 'தப்பு பண்ணிட்டேன்; பார்வை கொடு ஆத்தா'ன்னு இப்ப இங்கையே கிடக்காரு. ஆத்தாளும் மூலிகையைக் கொடுத்து கண்ணுல வெச்சு கட்டிக்க சொன்னிச்சு. ஒரு மண்டலத்துல போன பார்வை வந்துடும். அப்புறமா ஒழுங்கா நடந்துக்கோன்னு சொல்லிடிச்சு.''

''ஓஹோ... அதான் அவர் டாக்டரைக்கூட பார்க்காம இங்க இருக்காரா... ஆமா பார்வை வந்துடுமா?''

''என்ன தம்பி கேள்வி இது? ஆத்தா சொல்லி எது நடக்காம போயிருக்குது?''

''நீங்க சொல்லச் சொல்ல எனக்கு அவங்களப் பாக்கற ஆசை அதிகமாயிட்டே போகுது.''

''வேண்டாம் தம்பி. ஒழுங்கா ஊர் போய்ச் சேருங்க. சொல்லிப்புட்டேன். அப்புறம் நீங்களும் குருடாகி தடவிக்கிட்டு திரியாதீங்க...''

- பூசாரி நயமாக எச்சரிக்கை செய்ய, யோசனையோடு விலகிய நந்தகுமார் மீண்டும் அந்த குருட்டு மனிதர் முன் வந்தான்.

''ஐயா, நான்தான்... சாமி கும்புட்டுட்டேன். இப்ப பேசறீங்களா?''

''உங்களுக்கு என்ன தெரியணும் தம்பி?''

''பர்வதம்மாவை பார்க்கப் போய் இப்படி ஆனதா சொன்னீங்களே. அந்த குகைல அப்படி என்னத்த பார்த்தீங்க?''

''வேண்டாம் தம்பி... அத மட்டும் கேக்காதீங்க. பாத்ததுக்கே இந்தப் பாடு. பாத்ததை வெளிய சொன்னா எனக்கு பேச்சே போனாலும் போயிடும்.''

''இல்ல... நீங்க அநாவசியமா பயப்பட்றீங்க. அவங்கள கும்புடத்தானே போனீங்க, வேற எதுக்கும் போகலியே...?''

''நீங்க எப்படிக் கேட்டாலும் நான் அங்க பார்த்ததை சொல்ல மாட்டேன். விட்றுங்க. இன்னும் முப்பத்தஞ்சு நாள் இருக்குது. அதுவரை இங்க இருந்து பார்வை வந்த உடனே நான் திரும்பிக்கூட பார்க்காம ஊருக்கு போயிடுவேன்.''

- அவர் அதிகம் பயந்திருப்பது நடுங்கி நடுங்கி பேசுவதிலேயே தெரிந்தது. நந்தகுமாருக்குள் 'க்யூரியாசிட்டி'யும் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. மௌனமாய் அவரை வெறித்துவிட்டு நடந்தான். பூசாரியும் பார்த்துக் கொண்டிருந்தார்.

கோயிலுக்கு வெளியே சென்றவன் தேங்காய் பழ கடைக்காரர் முன்னால் போய் ''பர்வதம்மா இருக்கற குகைக்கு எப்படிப் போகணும்'' என்று மெல்லிய குரலில் கேட்டான்.

கடைக்காரர் அடுத்த நொடி கண்ணில் முள் ஏறியது போல முகம் இடுங்கிப் போய் ''தெரியாது தம்பி'' என்றார்.

''பயப்படாம சொல்லுங்க... நான் உள்ள எல்லாம் போகப் போறதில்ல. சும்மா அந்த குகையை ஒரு படம் எடுத்துக்கிட்டு திரும்பத்தான் கேட்கறேன்.''

''உள்ளகூட போங்க. எனக்கென்ன வந்துச்சு. அப்பால நீங்களும் குருட்டு முண்டமாயி அதா அந்த ஆள் கணக்கா மூலிகையைக் கண்ணுல கட்டிக்கிட்டு உக்காந்துக்க வேண்டியதுதான்...''



''நான்தான் சொன்னேனே... உள்ளெல்லாம் போக மாட்டேன்.''

''எதுக்கு தம்பி வம்பு. ஆத்தாளை பாக்கணும்னா ராத்திரி வரை இங்கையே இருங்க. இன்னிக்கு பௌர்ணமி. அதுவும் சித்திரை பௌர்ணமி. போன பௌர்ணமிக்கு ஆத்தா கோவிலுக்கு வந்துச்சு. இன்னிக்கும் வரும்னு நான் நினைக்கறேன். வந்தா அப்ப பாத்துக்குங்க!''

- கடைக்காரன் ஒரு புதிய வழியைக் காட்டினான்.

''இதை யாரும் சொல்லவே இல்லையே...''

''கேட்ருக்க மாட்டீங்க. அதனால யாரும் சொல்லியிருக்க மாட்டாங்க.''

''அதுவும் சரிதான்...'' - பதிலோடு இரவுவரை காத்திருக்கத் தொடங்கிவிட்டான் நந்தகுமார்!

## 4

இருட்டிவிட்டது!

பனிமூட்டத்தில் கோவில் இருக்கிற இடமே தெரியவில்லை. சித்திரை பௌர்ணமியின் பால் வெளிச்சம் வேறு நடுவில் புகுந்து ஒரு தினுசான காட்சியாக காட்டிக் கொண்டிருந்தது. நந்தகுமாருக்கு படுத்ரில்லாக இருந்தது.

கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டு!

கோவிலிலும் மணி சப்தம்.

பூசாரி அர்த்தசாம பூசையை ஆரம்பித்துவிட்ட மாதிரி தோன்றியது.

அந்த குருட்டு மனிதர் மட்டும் ''ஆத்தா வருவாங்களா பூசாரி...? வந்துடுவாங்கல்ல...? நிச்சயமா வந்துடு வாங்கல்ல?'' - என்று திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டே இருந்தார்.

''சித்தம் போக்கு சிவம் போக்கு... யாருக்குப்பா தெரியும்? எப்படியும் வருவாங்கன்னு நம்புவோம்,'' என்று பூசாரியும் சமாதானம் சொல்லியபடி இருந்தார்.

அவர் சொல்லிக் கொண்டிருந்த சமாதானம் வீண் போகவில்லை. 'டொய்ங்ங்...டொய்ங்ங்...' என்று சகுண்டி மணிசப்தமும், சங்கு முழக்கமும் காதில் கேட்க ஆரம்பித்தது.

அவர்கள் இருவரும் உடனேயே விறைப்பானார்கள். நந்தகுமாரும் சுறுசுறுப்பானான்.

எல்லோராலும் ஆச்சரியத்துடன்-அதியசத்துடன் விவரிக்கப்பட்டிருக்கும் ஒரு அபூர்வப் பெண்மணியை பார்க்கும் ஆவல் அவனைத் தொற்றிக் கொண்டது. கேமிராவையும் ஒரு பார்வை பார்த்தான். முக்கியமான சமயங்களில் அது நிறையவே கழுத்தறுத்திருக்கிறது. இன்று அப்படி எதுவும் ஆகிவிடக்கூடாது என்கிற எச்சரிக்கை.

பூசாரியும், அந்த குருடரும் வாயில் பக்கம் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள். சப்தம் மிக சமீபத்தில் கேட்க ஆரம்பித்தது. எங்கும் புகை போட்ட மாதிரி பனிமூட்டம். அந்த மூட்டத்துக்குள் தேவதை போல் ஒரு பெண் நுழைந்து கொண்டிருந்தாள்.

மிகச் சாதாரண கண்டாங்கிப் புடவைதான். குங்கும நிறத்தில் இருந்தது அது. ரவிக்கை அணிந்திருக்கவில்லை.



மாறாக புடவை முந்தியால் கழுத்துவரை போர்த்தியது போல மூடியிருந்தாள். நெற்றியில் நன்கு பெரிய பொட்டு. கண்கள் மான் விழியெல்லாம் சாதாரணம் என்கிற மாதிரி நீண்ட இமை முடிகளின் தோகையோடு பளிச்சென்று தெரிந்தது. தலை முடியும் அவிழ்ந்த நிலையில் இடுப்பைக் கடந்து ஆற்றில் குளித்தவர்கள் ஆறப்போடுகிற மாதிரி அலையடித்துக் கொண்டிருந்தது.

காலில் தண்டை!

நெருங்க நெருங்க அவளின் அழகு அள்ளியது! நந்தகுமார் வியப்பின் உச்சிக்கே போகலானான். அவளுக்குப் பின்னால் கோவிலுக்கு வெளியே கடை விரித்திருந்தவர் களும், ஊர்க்காரர்கள் சிலரும்கூட வந்தனர். எல்லாரிடம் ஆழ்ந்த ஓர் அமைதி இருந்தது. துளிகூட சப்தமில்லை. நடந்து வரும் அந்த பெண்ணின் தண்டை மட்டும் சிணுங்கலாகக் கொஞ்சியது. இடுப்பில் சகுண்டிமணி தொங்கியது. அவளது கையில் சங்கு இருந்தது.

மிகவும் சமீபித்து விட்டவளை பூசாரி கையெடுத்துக் கும்பிட்டார். ''ஆத்தா வந்துட்டியா...வா ஆத்தா... வா...''-என்று சன்னதி நோக்கி அழைத்துச் செல்லத் தொடங்கினார். அவளோ நின்று அந்த குருட்டு மனிதனை ஒரு பார்வை பார்த்தாள். அப்படியே பார்வையை விலக்கி மண்டபத்தில் ஒரு தூணை ஒட்டி கேமராவும் கையுமாக நின்று கொண்டிருந்த நந்தகுமாரையும் ஒரு பார்வை பார்த்தாள். பின் ஒரு சிரிப்பு சிரித்தாள். சரியான மாயப்புன்னகை! நந்தகுமாருக்கு பனிப் பள்ளத்தாக்கில் சறுக்கி விழுந்த மாதிரி இருந்தது. குருட்டு மனிதர் ''ஆத்தா... ஆத்தா...'' என்று தேம்பிக் கொண்டிருந்தார்.

''சரியாகிவிடும்...உனக்கு ஒரு மண்டலத்துல எல்லாம் சரியாகிடும்.''-என்று அவனிடம் ஆறுதலாக பேசியவள் நந்தகுமாரைப் பார்த்து சிரித்தபடியே நடந்தாள்.

நந்தகுமார் அந்த புன்னகையில் சற்று மயங்கினாலும் சுதாரித்து கேமராவை உயர்த்தி அந்த அழகிய பெண்ணை ஒரு மின்னல் ஃப்ளாஷில் கேமராவுக்குள் வாரினான். அந்த வெளிச்சம் அவளைச் சற்று தடுத்து நிறுத்தியது. புன்னகை அழிந்து முகத்தில் க்ஷணத்தில் கோப உணர்ச்சிகள் குவியத் தொடங்கின. பூசாரி அது புரிந்த மாதிரி ஓடிவந்து ''தம்பி...போட்டோல்லாம் பிடிக்காதீங்க...''-என்றார். நந்தகுமாரும் உடனே பேந்தப் பேந்த விழித்தான்.

''யார் அது?''-அந்த இளம் பெண்ணிடம் கேள்வி.

''பட்டணத்துல இருந்து வந்துருக்குது. உன் தரிசனத்துக்காகத்தான் தாயி காலைல இருந்து காத்திருக்குது.''-பூசாரி சொல்ல மீண்டும் ஒரு அழுத்தமான பார்வை!

நந்தகுமார் பதிலுக்கு மிரள மிரளப் பார்த்தான்.

''ஆத்தாவைக் கும்புட உனக்கு மனசு வரலையா?'' அந்தப் பெண்ணே கேட்க-

''நீங்கதான் எல்லாரும் சொல்ற பர்வதம்மாவா?''

''அதுலையே உனக்கு சந்தேகமா?''

''குகையைவிட்டு. நீங்க வெளியவே வர மாட்டீங்களா?''

''எதுக்கு இந்த கேள்விங்களையெல்லாம் கேக்கறே?''

''உங்களப் பத்தி கேள்விப்பட்ட விஷயங்கள் எல்லாமே பயங்கர ஆச்சரியமானதா இருக்கு. புரிஞ்சுக்கத் தான்.''



''என் விஷயங்கள் இருக்கட்டும். உனக்கு உன்னைத் தெரியுமா?''

''எனக்கு என்னைத் தெரியுமான்னா?''

''நீ உன்னை புரிஞ்சு வெச்சுக்கிட்டிருக்கியான்னு கேட்டேன்.''

''எனக்கு என்னைத் தெரியாமலா...? நல்லா தெரியுமே...!''

''என்ன தெரியும்...?''

''என்ன தெரியும்னா...?''

''திருப்பித் திருப்பி என்னையே கேள்வி கேட்காதே. தன்னை அறியாத யாரும் என்னை அறிய முடியாது. தன்னை அறிஞ்ச ஒருத்தன் என்னை அறியவும் தேவையில்லை. ஒழுங்கா ஊருக்குப் போய் வேலையைப் பார். எண்ணி பதினைஞ்சு நாள்ல உனக்கு கல்யாணம் ஆகப்போகுது. கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா வாழ முயற்சி செய். என்னை ஆராய்ச்சி செய்யற வேலையெல்லாம் வேண்டாம்.''

-பர்வதம்மா என்று அறியப்பட்ட அந்த இளம் பெண் ஒரு தேர்ந்த ஞானியைப் போல பேசிவிட்டு சன்னதி முன் போய் நின்றாள். பூசாரியும் தீபாராதனை காட்டத் தொடங்கினார். அவளும் மனமுருகி வழிபட்டாள். பூசாரி அவளுக்கு மாலையணிவித்தார். கையில் ஒரு அகல் விளக்கையும் எடுத்துத் தந்தார். அதை ஏந்திக் கொண்டு அந்தப் பெண்ணும் கோவிலை வலம் வரத்தொடங்கினாள்.

நந்தகுமார் பார்த்துக் கொண்டே நின்றான்.

மற்றவர்கள் அமைதியாக அவள் பின்னாலேயே நடந்தனர்.

அகல் விளக்கும் கையுமாய் அந்தப் பெண் காற்றில் ஆடும் கூந்தலுடன் நடந்து வரும் விதம் அவனையே என்னவோ செய்தது.

அவன் நிறைய சாமியார்களைப் பார்த்திருக்கிறான். அவர்களில் இளம் பெண்களும் உண்டு. ஆனால் யாரிடமும் இப்படி ஒரு சுண்டி இழுக்கும் அழகு இருந்ததில்லை. பொன்னை மை போல அரைத்து பூசிக் கொண்ட மாதிரி ஒரு தேகமோ, கரும்பட்டு நூலே கேசமாக தொங்குகிற மாதிரி கூந்தலையோ அவன் பார்த்ததில்லை.

ஆச்சரியம் அலைமோதியது.

விளக்குடன் நடந்து வரும் காட்சி அற்புதமாகவும் இருந்தது. மீண்டும் கேமராவை எடுத்தான். அவளது எச்சரிக்கையை மீறி ஒரு தட்டு தட்டினான்.

ஃப்ளாஷ் வெளிச்சம் பரவி அடங்கியது.

விளக்குடன் அந்த பெண்ணும் நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தாள். முதலில் கோபமாய்ப் பார்த்தாலும் பிறகு பழைய புன்னகைக்கு மாறினாள்.

''நீ அடிபட்டாதான் திருந்துவே போல இருக்கே?'' என்றாள்.

பூசாரி பதைத்துப் போனார்.

''தம்பி போப்பா அந்தாண்ட... உனக்கு நேரம் சரியில்லன்னு நினைக்கறேன். அதான் ஆத்தா அவ்வளவு சொல்லியும் திரும்பப் படம் எடுக்கறே... போயிடு... போ...''-துரத்திவிட்டார்.அவனுக்கும் அப்போதைக்கு அதுவே போதும் என்று தோன்றியது. பதில் பேசாமல் கிளம்பினான்.



## 5

**பௌர்ணமி நிலா வெளிச்சம்!**

வானில் இருந்து யாரோ பீச்சாங்குழலால் பாலை பீச்சிக் கொண்டிருக்கிற மாதிரி ஒரு காட்சியைத் தந்து கொண்டிருந்தது.

பஞ்சமூர்த்தி மலை அடிவாரச் செக்போஸ்ட்டில் சென்ட்ரி போலீஸ்காரர் அதை ரசிக்கத் தெரியாமல் மூக்குப் பொடி போட்டுக் கொண்டிருந்தார்.

அப்பொழுது வயதான ஒருவர் செக்போஸ்ட்டைக் கடந்து நடந்து போய்க் கொண்டிருந்தார்.

போலீஸ்காரர் பார்த்துவிட்டு''யாரப்பா அது... இந்த ராத்திரியில'' என்று குரல் கொடுக்க, திரும்பினார்.

''யாரு...?''

''என்ன தம்பி... என்னத் தெரியலியாக்கும்?'' -கேட்டபடி அவர் சமீபிக்கவும் சென்ட்ரி போலீஸுக்கு அவர் யார் என்று அர்த்தமாகியது.

வைத்தியர் அண்ணாமலை!

''வைத்தியரா... எங்க வைத்தியரே, மூலிகை பறிக்கவா?''

''ஆமாம் தம்பி. சித்ரா பௌர்ணமியாச்சே. அதான் கிளம்பி வந்தேன்.''

''நீங்களும் பௌர்ணமிக்கு பௌர்ணமி இந்த பஞ்சமூர்த்தி மலைக்கு மூலிகை பறிக்க வர்றீங்க. ஆமா அது என்ன கணக்கு வைத்யரே?''

''நிலா வெளிச்சத்துக்குன்னு ஒரு சக்தி உண்டு. அப்ப சில மூலிகைங்க எட்டிப் பார்க்கும். மத்த நாள்ல வந்தா அது கிடைக்காது தம்பி.''

''அப்படியா சங்கதி?''

''அதுலையும் சித்ரா பௌர்ணமிக்கு ஒரு விசேஷ சக்தி உண்டு, கோடை வெப்பத்துல தாவரமெல்லாம் அனல் கண்டு அதோடு வேர்கள் ஈரத்தை முடிஞ்ச அளவு உறிஞ்சி தண்டுப் பகுதியில் சேமிச்சு வெச்சிருக்கும். தரைப் பரப்புலையும் நித்ய ஈரம், நிதான ஈரம், பத்திய ஈரம், பதனமான ஈரம்னு பல நிலை இருக்கு. அதுல பத்திய ஈரம் பூமிக்கடியில நிலவறப்போதுதான் சந்திரகாந்தி தலை யெடுக்கும். அது கிடைக்கறது அபூர்வம். அது கிடைச்சுட்டா அதைக் கொண்டு வைத்தியங்களைச் செய்து நோய்களைக் குணமாக்கலாம். மனசைக் கட்டுப்படுத்தற வசிய மை தயாரிக்கலாம். இப்படி எவ்வளவோ இருக்கு...''

-வைத்தியர் அண்ணாமலை விஸ்தாரமாய் பேசினார். சென்ட்ரி போலீஸ் வாயைப் பிளந்தார்.

''என்னென்னவோ சொல்றீங்க... ஆமா வசிய மை அது இதுங்கறீங்களே. மேலதிகாரிகளை வசியப்படுத்தி பிரமோஷன் வாங்கறதுக்கு உங்களாண்ட எதாவது மை இருக்கா?''-கேலியாகக் கேட்டார் சென்ட்ரி.

''இந்த உலகத்துல மூலிகைகளால ஆகாதது எதுவுமே இல்லை. பண்ணத் தெரியணும். இந்த விஷயத்துக்கு இன்னமூலிகைன்னு விஷயம் தெரியணும். தெரிஞ்சுட்டா என்னென்னவோ பண்ணலாம்.''

''என்னனென்னவோன்னா?''

''ஒரு வேர் இருக்கு. அத முகர்ந்து பார்த்தாலே போதும் நாம மாயமா மறைஞ்சிடுவோம். நம்புவீங்களா இதை?''



''நிசமாவா?''

''இருக்கே... நான் பார்க்க இதே பஞ்சமூர்த்தி மலைக் காட்டுல ஒரு சாமி எத்தனை தடவை அந்த மாதிரி என் கண் எதிர்க்க மறைஞ்சிருக்கார் தெரியுமா?''

''என்ன வைத்தியரே... நான் அக்கறையா கேக்கறேன்னு என் காதுல பூ வைக்கறீங்களா?''

''அதுல எனக்கு என்ன லாபம் சொல்லுங்க...''

''அதுசரி... அது எப்படி வைத்தியரே மோந்து பாத்துல்லாம் மறைய முடியும்? அப்படி முடியும்னா அதை எங்க டிபார்ட்மெண்ட்டுக்கு கொஞ்சம் கொடுங்க. காட்டுக்குள்ளார திருட்டுப்பசங்க மரம் வெட்ட வரும்போது மாயமா அவங்களைப் போய் அமுக்கிப் புடிக்க எங்களுக்கும் ரொம்ப வசதியா இருக்கும்.''

''அதுக்கென்ன... அந்த வேர்த்தண்டு கிடைச்சா நிச்சயமா உங்களுக்கு தரேன். அது கிடைக்கறதுலதானே எல்லாம் இருக்கு.''

''இப்படி கேட்டா அப்படி... அப்படி கேட்டா இப்படி பதில் சொல்றதா?''

''தம்பி, நான் உள்ளதச் சொல்றேன். அபூர்வமான விஷயமெல்லாம் அபூர்வமான மனுஷங்களுக்குத்தான் கிடைக்கும். எல்லாருக்கும் கிடைக்காது. அப்படிக் கிடைச்சிட்டா அப்புறம் ஆளாளுக்கு தப்பு பண்ணிட்டு வேரைக் கொண்டு மாயமா மறைஞ்சு தப்பிச்சிட மாட்டாங்களா?''

''லாஜிக் படி பார்த்தா நீங்க சொல்றதும் சரிதான். இருந்தாலும் நம்பமுடியல வைத்யரே...''

''உங்களை யார் நம்பச் சொன்னா... இதெல்லாம் கட்டுக்கதையாவே இருந்துட்டு போகட்டும். அதான்

எங்களுக்கும் நல்லது. நானே முயல்காது இலைக்காக இதுவரை முந்நூறு பௌர்ணமி ராத்திரி அலைஞ்சுட்டேன். கண்ணுல படமாட்டேங்குது.''

''முயல்காது இலையா...? அது என்ன?''

''அது ஒரு மூலிகை...!''

''வேடிக்கையா இருக்கே...?''

''இதுவே வேடிக்கையா இருக்குன்னா எலியா மணக்கு, யானைத்திப்பிலி, குதிரைவாலி, ஆடுதீண்டாப் பாளை, சிலந்திநாயகன், நாக மஞ்சள், குரங்கு மஞ்சள், கருடநாரை, செந்நாயுருவி'ன்னு ஒவ்வொரு மிருகம் பேரால ஒரு மூலிகை இருக்குதே... அதுக்கெல்லாம் என்ன சொல்வீங்க?''

''அட... இப்படி எல்லாம் கூடவா மூலிகைங்க இருக்கு?''

''இப்படியா... இதுக்குமேலையும் இருக்கு தம்பி. 'கன்னிக்காலி'ன்னு ஒரு செடி இருக்கு. இதை சாப்ட்டா முதுமையே நம்மைத் தாக்காது... தெரியுமா?''

''நிசமாவா?''

''விடுங்க... இந்த மாதிரி நான் எவ்வளவோ விஷயங்கள் சொல்லிக்கிட்டே போவேன். உங்களுக்கு அதெல்லாம் அம்புலிமாமா கதை மாதிரி இருக்கும். எனக்கும் நேரமாகுது. நான் வர்றேன்...''

-வைத்தியர் அண்ணாமலை நடந்தார். சென்ட்ரி போலீஸையும் கொட்டாவி ஆக்ரமித்தது.

''பாத்துப் போய் வாங்க... பக்கத்து காட்டுல தண்ணி இல்லைன்னு யானைங்களும், மானுங்களும் இப்ப நம்ம காட்டுக்குள்ள நுழைஞ்சிட்டதா ஒரு தகவல் வந்துருக்குது.''



-போகும் அவருக்கு எச்சரிக்கை செய்து வழி அனுப்பி வைத்துவிட்டு செக்போஸ்ட் நாற்காலியில் போய் அமர்ந்தார்!

வைத்தியர் காட்டுக்குள் நுழைந்திருந்தார். பால் நிலா வெளிச்சம் வழிகாட்டினாலும், பனிமூட்டம் பெரிய தொல்லையாக இருந்தது.

சாதாரணமாக சித்திரை மாதத்தில் பனி இருக்காது. அதென்னவோ தெரியவில்லை. இந்த முறை இயற்கையே மாறிப்போய் மார்கழியில் புயலும் மழையும் கொட்டியது. பங்குனி வெய்யிலில் பொன் உருக வேண்டும். மாறாக அப்பொழுதுதான் தரைப்பனியே தட்டிற்று. இப்பொழுது சித்திரையிலும் பனிமூட்டம்.

அவ்வளவாக குளிரில்லாவிட்டாலும் பார்ப்பதற்கு இடைஞ்சலாக இருந்தது.

வைத்தியர் டார்ச் லைட் வைத்திருந்தார். அது கொஞ்சம் உதவி செய்தது. மலைத் தரை முழுக்க காய்ந்த இலைச் சருகுகள்-சுள்ளிகள். நடக்கையில் பலமாக சலசலத்தன. இதனால் ஒளிந்திருக்கும் முயல்கள் திபுதிபு வென்று ஓடி அவரையே கொஞ்சம் அச்சப்படுத்தின.

நெடுந்தூரம்வரை தரையில் பார்வையை செலுத்திய படியே வந்தவர் அங்கங்கே தெரிந்த சின்னச் சின்ன மூலிகைச் செடிகளைப் பறித்து தன் மூங்கில் கூடையில் போட்டுக் கொண்டார்.

இருந்தும் பெரிதாக தேடி வந்தது கிடைக்காத மாதிரி ஒரு ஏமாற்றம் தெரிந்தது. நடுவில் ஓடை ஒன்று குறுக்கிட்டது... மண்பானையில் காசுகளைப் போட்டு குலுக்கினமாதிரியான சப்தத்தோடு அதன் நீரோட்ட சப்தம் அவர் காதிலும் விழ அதை நோக்கி நடந்தார்.

தாவிக் குதித்து பாறைகள் மேல் விழுந்து உருண்டு பிரண்டு ஓடிவரும் அந்த நீரில் நல்ல ஜிலுஜிலுப்பு.

தண்ணீரில் வைத்தியரின் பாதம்பட்ட நொடி உச்சி மண்டையில் ஒரு சிலிர்ப்பு!

குனிந்து நீரை அள்ளிப் பருகிவிட்டு நிமிர்ந்தார். பகிரென்றது!

எதிரில் முகமூடியணிந்த ஒருவன் கைத்துப்பாக்கியோடு...

வைத்தியர்முகத்தில் தடுமாற்றம். அவன் பேசினான்.

''யார் நீ?''

''நான்...நான்...மூலிகை வைத்தியன். மூலிகை தேடி வந்தேன்.''

''பார்தாலே தெரியுதே. எந்த ஊர்? அடிவாரமா?''

''ஆ...ஆமாம்!''

''சரி சரி...அப்படியே திரும்பிப்போ. ஓடையைத் தாண்டி இந்தப் பக்கமா வராதே...''

-மிரட்டினான். அப்படிச் சொல்லும்போதே மலையில் மரங்களைத் திருடவந்த கள்ளனாகத்தான் அவன் இருக்கவேண்டும் என்று வைத்தியருக்கும் புரிந்துவிட்டது.

''அந்தப் பக்கம்தான்பா நான் தேடிவந்த மூலிகை இருக்கு. இப்ப விட்டா நான் அப்புறம் அடுத்த சித்ரா பௌர்ணமி வரை காத்திருக்கணும்...''

-வைத்தியர் தைரியமாகப் பேசியது அவனைச் சற்று யோசிக்க வைத்தது.

''யோசிக்காதப்பா... நான், நீ யாரு - என்ன பண்றேன்னுல்லாம் கேட்கமாட்டேன். என்வேலையைப் பாத்துக்கிட்டு போயிடுவேன்.''



அவன் அவரை கூர்ந்து பார்த்தான். பிறகு ஓடையில் இறங்கி நெருங்கி வந்து அவர் கூடையைப் பார்த்தான். அதில் மூலிகை செடிகள்.

''ஆமா... அப்படி என்ன மூலிகைல்லாம் இந்த மலைக்காட்டுல இருக்குது...''-கேட்டான்.

''உனக்கு சொன்னா புரியாது.''

''சரி... ஆனா என்னைப் பார்த்த விஷயத்தையோ அடுத்து நீ இந்த மலைக்காட்டுக்குள்ள பாக்கப்போற எதைப்பத்தியுமோ வெளிய மூச்சுவிடக் கூடாது.''

''எனக்கு எதுக்கு தம்பி வம்பு... அப்படி நான் வெளிய சொன்னா என்ன நடக்கும்னு எனக்குத் தெரியும். என் வைத்திய சாலைக்குத் தேடி வந்து என்னை சுட்டுக் கொல்லக்கூட தயங்கமாட்டீங்க. சரிதானே?''

''பரவால்லியே... உனக்கு எங்களப்பத்தி நல்லா தெரிஞ்சிருக்குதே?''

''நான் மருதப்பன் கோஷ்டியையே பார்த்தவன்.''

''அப்ப உனக்கு மருதப்பனை தெரியுமா?''

''நல்லா தெரியும். மருதப்பன் என்கிட்டதான் வைத்தியமே பாத்துக்குவான். ஆனா இப்பல்லாம் இந்த காட்டுப்பக்கம் அவனைப் பாக்க முடியறதே இல்லை.''

-வைத்தியர் பேசப்பேச அவனிடமும் இறுக்கம் தளர்ந்தது. துப்பாக்கியை பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டான்.

''சரிசரி...நீ போய் மூலிகை பறிச்சுக்கோ. ஆனா நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்.''

வைத்தியரும் தலையாட்டிவிட்டு நடந்தார். உயரமான மலை வேம்புகளும், மஞ்சக் கடம்புகளும் பௌர்ணமி

வெளிச்சத்தில் கூடிக் குலாவிக் கொண்டிருக்க, தரைப் பரப்பில் சந்திரக்கதிர் ஊடாடிக் கொண்டிருந்தது. நடக்க நடக்க நாசியை ஒரு வித துர்வாடை தாக்கியது. ஒரு இடத்தில் தீப்பந்த வெளிச்சத்துக்கு நடுவில் சிலர் என்னவோ செய்து கொண்டிருந்தனர். ஒரு மரத்தின் பின் ஒளிந்தபடி ஊன்றிப் பார்த்தபோது பதைத்துப் போனது மனது.

ஒரு காட்டு யானையை அவர்கள் வெட்டிக் கூறுபோட்டுக் கொண்டிருந்தார்கள். ரத்தச் சொத சொதப்போடு இரண்டு தந்தத்தை ஒரு கையில் பிடித்தபடி நின்று கொண்டிருந்தான் ஒருவன். கொடுமையான-ஈவிரக்கமற்ற யானைத் தந்த வேட்டை. வைத்தியர் அண்ணாமலைக்கு நெஞ்சையடைத்தது. இதற்கு முன் கள்ளர்கள் காட்டுக்குள் விலையுயர்ந்த சந்தனம், தேக்கு இவைகளைக் கடத்திப் பார்த்திருக்கிறார். ஆனால் இப்படி யானை வேட்டையாடிப் பார்த்ததில்லை. வயிற்றைப் பிரட்டி குமட்டியது.

அந்த ரத்த வாடைக்கு அங்கங்கே சில காட்டு நாய்கள் கூட வந்துவிட்டிருந்தன. அதன் கண்களில் தீப்பந்த வெளிச்சம் படும்போது நீலமாய் ஒருவித ஒளிச்சுடர் தெரிந்து-பார்க்கவே பயங்கரமாய் இருந்தது. இளைப்போடு நாக்கைத் தொங்கபோட்டுக் கொண்டு மாமிசத்துக்காக வரும் நாய்களை ஒருவன் தீப்பந்தம் காட்டி தூர விரட்டிக் கொண்டிருக்க, ஒருவன் யானை எலும்புகளை விறகுக் கட்டை வெட்டுவதுபோல வெட்டி எடுத்துக் கொண்டிருந்தான்!

வைத்தியரால் நெடுநேரம் அந்தக் காட்சியைப் பார்க்க முடியவில்லை. வேறுபக்கமாய் வேகமாய் நடந்தார். பல இடங்களில் மரக்கிளைகள் வழி மறித்தன. தாண்டி நடப்பது சிரமமாக இருந்தது. ஒரு இடத்தில் பள்ளத்தில் யாரோ



விழுந்து கிடக்கின்ற மாதிரி தெரிந்தது. அடிவயிறு அமிலம் பீய்ச்சியது.

யாரது...?

கிட்டே சென்று பார்க்கக்கூட அச்சமாக இருந்தது. பயந்து விலகுவதும் கீழ்மையாகத் தோன்றியது. துணிந்து பள்ளத்தில் இறங்கி சென்று குனிந்து பார்த்தார். ரத்தக் காயங்களுடன் நந்தகுமார்!

## 6

விடிந்துவிட்டது! வைத்தியர் வீட்டில் நந்தகுமாரும் கண் விழித்தான். எதிரில் வைத்தியர்! ஆச்சரியமாய் இருந்தது. 'முதல் நாளன்று இரவில் காட்டுக்குள்-மயங்கி விழுந்தவன் இங்கே எப்படி வந்தேன்?' என்கிற பாவனைகளுடன் அவரைப் பார்த்தான்.

''உனக்கு ஆயுசு கெட்டி தம்பி. அதான் நடுக்காட்டுல மயங்கிக் கிடந்த உன்னை நான் பார்த்தேன்.'' என்ற வைத்தியரைப் பார்த்து கைகூப்பினான்.

''அதெல்லாம் இருக்கட்டும். கைல கேமராவோட மயங்கிக்கிடந்தியே. யானைத் தந்தத்தை திருடவந்தவங்கள படம் பிடிக்கத்தான் வந்தியா?''

-அந்தக் கேள்வியே அவனுக்கு அதிர்ச்சியளித்தது.

''இல்லீங்க... நான் வேற விஷயமா வந்தேன். ஆமா இந்தக் காட்டுல அதெல்லாம் வேற நடக்குதா?''

''இது நாள் வரைல இல்ல. ஆனா நேத்தி நானே அந்த கொடுமையைப் பாத்தேன்.''

''நீங்க...?''

''நாட்டு வைத்தியம்ப்பா. மூலிகை தேடி காட்டுக்குப் போனப்பதான் அந்த கொடுமையையும், உன்னையும் பாக்க முடிஞ்சது. நீ யாருப்பா?''

''என்பேர் நந்தகுமார். ஃப்ரீலான்ஸ் பத்திரிகை ரிப்போர்ட்டர்!''

''பத்திரிகைக்கார ஆளா...? ஆமா யார் துரத்தி வந்து பள்ளத்துல விழுந்தே?'

''யாரும் துரத்தலை...ஓடி வரும்போது கால் இடறி கீழ விழுந்துட்டேன்.''

''ஓடிவந்துன்னா... யாராவது துரத்தியிருக்கணுமே?''

-வைத்தியர் மடக்கினார்.

-நந்தகுமார் மேற்கொண்டு பேசப் பிரியமில்லாத மாதிரி அவரைப் பார்த்தான்.

''சும்மா சொல்லு... பத்திரிகைக்கார ஆளுங்கறே. நிச்சயம் காத்துவாங்க இந்த மலைப்பக்கம் வந்துருக்க மாட்டே. அதான் கேக்கறேன்.''

''வாஸ்தவம்தான். நான் பர்வதம்மாவை பாக்க வந்தேன்.''

-அவன் அப்படிச் சொன்னதுதான் தாமதம். வைத்தியர் அவனை மிரண்டு போய் பார்த்தார்.

''ஏன் என்னவோ மாதிரி ஆயிட்டீங்க... பர்வதம்மாவை பாக்கறதுங்கறது அவ்வளவு தப்பான விஷயமா?''

''அது இல்ல... ஆமா உனக்கு பர்வதம்மாவைப் பத்தி எப்படித் தெரியும்?''

''பத்திரிகைக்காரங்களுக்கு தெரியாத ஒரு விஷயம்கூட இந்த பூமியில இருக்க முடியுமாங்க?''



''சரி... அப்ப கேள்விப்பட்டுத்தான் பாக்க வந்துருக்கே. ஆமா அவங்கள பாக்க முடிஞ்சுச்சா?''

''உம்...''

''எங்க பார்த்தே...எப்படிப் பார்த்தே?''-வைத்தியர் வேகவேகமாக அந்தக் கேள்விகளை கேட்டார்.

''மலைல இருக்கற கோவிலுக்கு சாமி கும்பிட வந்தாங்க...''

''அப்படியா...? அடடா இது தெரியாம நான் இருந்துட்டேனே...!''

''ஆமா... அவங்களுக்கு நிஜமாலுமே நூறு வயசுக்கு மேல இருக்குங்களா?''

''இப்ப அதுதான் உனக்கு சந்தேகமா தம்பி...''

''ஆமாங்க... நூறு வயசான ஒருத்தர் எப்படிங்க இப்பவும் இருபது இருபத்தஞ்சு வயசு இளமையோட ளஇருக்க முடியும்?''

''அதுதான் தம்பி ஆத்தாளோட சக்தி.''

''அப்ப உங்களுக்கு சந்தேகமெல்லாம் இல்லையா?''

''கண்ணால பாக்கறோமே... நான் ஆத்தாளை சிறுவயசுல இருந்து பாக்கறேன். கட்டுக் குலையாம அப்படியேதான் இருக்கறாங்க.''

''உங்களுக்கு வயசு...?''

''எவ்வளவு இருக்கும் நீயே சொல்லேன்.''

''ஒரு ஐம்பது இருக்குமா?''

-உடனேயே வைத்தியர் சிரித்தார்.

''எதுக்கு சிரிக்கிறீங்க...?''

''எனக்கு வயசு எண்பது தம்பி.''

''எண்பதா...? தலைல ஒரு முடிகூட நரைக்கல. கன்னத்துல சுருக்கம் விழல. ஆச்சரியமா இருக்குதே!''

''உப்பு, காரம், எண்ணெய்னு தின்னா உடம்பு வேகமா களைச்சிப் போயிடும் தம்பி. சிறுவயசுல இருந்தே ஆகாரக்கட்டுமானம் உள்ளவன் நான். போதாததுக்கு யோகாசனம்லாம் வேற பண்ணுவேன். முதுமை என்னை எப்படி நெருங்க முடியும்?''

''நல்ல பதில்தான்... உங்க பதில்ல ஒரு நியாயம் இருக்குது. உணவுக்கட்டுப்பாடு-யோகம்னு சொல்றதால நான் நம்பறேன். ஆனா இருபது வயது இளமைங்கறது எனக்கு உண்மையிலேயே நம்ப முடியாத விஷயமாத்தாங்க இருக்கு.''

''அதான் அது எப்படின்னு தெரிஞ்சுக்க வந்திங்களாக்கும்?''

''ஆமாம். அந்த அம்மாவையே பேட்டி எடுக்கலாம்னு பார்த்தேன். ஆனா அவங்களைப் பாக்கறதே தப்புங்கற மாதிரி சூழ்நிலை இருந்ததை அங்க போன பிறகுதான் தெரிஞ்சுகிட்டேன். அது எப்படி தப்பாகும்?''

''ஆத்தா விஷயத்தை எடைபோட்டுப் பார்க்க முயற்சி செய்யறது தப்புதான் தம்பி. நல்லவேளை உனக்கு ஒண்ணும் ஆகலை. ரொம்ப பேருக்கு கண்ணு போயிருக்கு. காது கேட்காம போயிருக்கு.''

''ஒரு அபூர்வ விஷயத்தைப் புரிஞ்சுக்க முயற்சி செய்யறது எப்படிங்க தப்பாகும்?''

''முயற்சியை அதுக்குண்டான முறைல செய்யணும். சந்தேகத்தோட செய்யக்கூடாது.''

''அதுக்குண்டான முறையிலன்னா... எப்படீங்க?''

''நீ எப்படி முயற்சி செய்தே... அதைச் சொல்லு.''



''ஒரு பத்திரிகைக்காரன் எப்படி முயற்சி செய்வான்? போட்டோ எடுப்பான்-கேள்வி கேட்பான்.''

''போட்டோ எடுத்து கேள்வி கேட்டுட்டா அந்த அபூர்வ விஷயம் உனக்கு விளங்குமா?''

''விளங்காதா?''

''இந்த உலகத்துல சித்த ரகசியங்கள்னு ஒண்ணு இருக்கு. அதை எல்லாம் அஞ்சும் மூணும் எட்டுங்கற கணக்குமாதிரி போர்டுல எழுதிப்போட்டு புரிய வைக்க முடியாது.''

''சரி... நீங்க சொல்ற மாதிரியே இருக்கட்டும். 'உனக்கு அதைப் புரிய வைக்க முடியாது'ன்னு சொல்ல வேண்டியதுதானே. எதுக்காக கண்ணு போயிடும், காது கேட்காதுன்னு மிரட்டணும்?''

''ஒரு குழந்தை ஈ மொய்க்கற பொரி உருண்டையை கேட்குது. சாப்ட்டா உடம்புக்கு கெடுதல்னு சொன்னாலும் கேட்க மாட்டேங்குது. அப்ப என்ன செய்வோம்?''

''அது...அதுவும் இதுவும் ஒண்ணா?''

''நிச்சயமா... சில ரகசியங்கள் ரகசியமாகத்தான் இருக்கணும். அப்படி இல்லேன்னா அதனால் ஊர் உலகத்துக்குதான் கெடுதல் தம்பி.''

''நீங்க சொல்றதே புரியல எனக்கு.''

''புரிய வேண்டாம். நல்ல நேரத்துல நீ ஊருக்கு போய்ச் சேரு. திரும்பவும் இந்த பக்கம் வந்துடாதே.''

''நீங்களும் மிரட்றீங்களே வைத்தியரே.''

''மிரட்டலை... உன் நன்மைக்காக சொன்னேன். அப்புறமா உன் இஷ்டம்!''

-நந்தகுமார் வைத்தியரை ஆழமாகப் பார்த்தான். அதற்குமேல் எவ்வளவு பேசினாலும் அவர் அரைத்த மாவையேதான் அரைக்கப் போகிறார்.

இனி பேசுவதில் பலனில்லை என்றே தோன்றியது. அதே சமயம் பர்வதம்மா தங்கியிருப்பதாக சொன்ன குகைக்குள் தைரியமாகவும், ரகசியமாகவும் நுழையப் போனபோது உள்ளிருந்து புலியின் உறுமல் சப்தம் கேட்டதையும், தலை தெறிக்க ஓடி வந்து பள்ளத்தில் விழுந்ததையும் ஒரு முறை எண்ணிப் பார்த்தான்.

'அந்தக் குகையில் ஏதோ ஒரு ரகசியம் இருக்கிறது. பர்வதம்மாள் அதை ஒரு அமானுஷ்யப் போர்வையில் உலகம் அறியாதபடி காப்பாற்றிக் கொண்டிருக்கிறாள்.

இவர்கள் பகுத்தறிவால் அதைப் புரிந்து கொள்ள முயலாமல் பயத்தால் அவளிடம் நெருங்கவே தயங்குகின்றனர்.

ஆனால் நான் அப்படியெல்லாம் பயந்து ஒதுங்கிப் போய்விடமாட்டேன் வைத்தியரே!''

-மனதுக்குள் சொல்லிக் கொண்டான். வைத்தியரும் தனது அடுத்த வேலையை பார்க்கத் திரும்பினார்.

இனி அடுத்து?

## 7

அட்டெண்டர் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன காராசேவையும், டீயையும் சுவைத்தபடி முக்கிய மான ஒரு ஃபாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார் பழனிக்குமார்.

''குட்மார்னிங் சார்!''



-குரல் கேட்டு நிமிர்ந்தவர் எதிரில் நந்தகுமார்.

''வாய்யா... உட்கார்.''

-நந்துவும் அமர்ந்தான்.

''டீ சாப்பிட்டியா... ராமசாமி...! ஒரு டீ.''

-அங்கிருந்தே குரல் பறந்தது. அப்படியே நந்தகுமாரை ஊன்றிப் பார்த்தார். நெற்றியில் ஒரு பிளாஸ்திரி.

''என்னய்யா... என்ன ஆச்சு போனவிஷயம்?''

''ஒரே குழப்பமா இருக்கு சார்...''

''தலைலகூட காயம் போல இருக்கே. போன இடத்துல ஏதாவது வீர தீரச் செயல்ல ஈடுபட்டையா?''

''அப்படித்தான் சொல்லணும். ஆனா சாண் ஏறி முழம் சறுக்கினா மாதிரி ஒரு ஃபீலிங்.''

-நடுவில் டீ கப் நுழையவும் எடுத்து சூப்பினான். சுமாரான சூடுள்ள நடுத்தரமான டீ. பாதி குடித்துவிட்டு வைத்தான். பெருமூச்சு விட்டான்.

''உம் விஷயத்தைச் சொல்லு.''

''பஞ்சமூர்த்தி மலை பர்வதம்மா பின்னால ஏதோ ஒரு பயங்கர மர்மம் இருக்கு சார்.''

''சாமியார்ப் பொம்பளைங்கன்னாலே மர்மம்தான். அது என்னன்னு கண்டுபிடிக்கறதுதானே நம்மள மாதிரி பத்திரிகைக்காரங்க வேலை.''

''அங்கதான் சார் சிக்கலே... அந்தம்மா மலைல ஒரு குகைல இருக்காங்க. வருஷத்துக்கு ஒரு தடவையோ இரண்டு தடவையோதான் வெளிய வருவாங்களாம். பாக்க சிம்ரன் மாதிரி எவ்வளவு அழகா இருக்காங்க தெரியுமா?''

''அப்ப உன் வரையில சிம்ரன் அழகியா?''

''இல்லையா சார் பின்னே. நான் வயசக் குறிப்பிட்றதுக்காக அப்படி சொன்னேன்.''

''சரி சொல்லு...''

''நான் போன அன்னிக்கு அதாவது நேத்தைக்கு சித்ரா பௌர்ணமி. நல்ல வேளையா வெளிய வந்தாங்க. பார்த்தேன். போட்டோவும் எடுத்தேன். ஆனா பதிலுக்கு அவங்க முறைச்ச முறைப்பிருக்கே...''

''குட்... பர்வதம்மாவை படம் எடுத்துட்டே. அவங்களும் சிம்ரன் கணக்கா இளமையோட இருக்காங்க. அப்புறம்?''

''அவங்களுக்கு 100 வயசுங்கறதத்தான் நம்ப முடியல.''

''நாம சொன்னா வாசகனும் நம்பமாட்டான். அதுக்கு என்ன ஆதாரம்னு கேட்பான்.''

''அவங்கள பல வருஷமா பாத்துக்கிட்டிருக்கற அந்தப் பகுதி மலை வாழ் மக்கள்தான் சார் ஆதாரம்.''

''அவங்கல்லாம் பொய்கூட சொல்லலாம் இல்லையா?''

''பொய் சொல்றதுல அவங்களுக்கு என்ன சார் லாபம்?''

''அப்ப அதுதான் மர்மம்... அதுதான் கேள்வி.''

''ஆமாம் சார்.''

''அந்தம்மாகிட்டையே கேட்டுட வேண்டியது தானே?''

''எங்க சார்... அவங்கள பார்த்ததே அபூர்வம்னு சொல்லும்போது பேசறது எப்படி? பேச முயற்சி செய்தேன். துணிச்சலா-அவங்க இருக்கறதா சொல்ற குகைக்கும் போனேன். உள்ற இருந்து ஒரு சிறுத்தைப்புலி என்னைத் துரத்தினா நான் என்ன சார் பண்ணுவேன்...?''



''அப்ப அங்க சம்திங் என்னவோ இருக்கு. ஆமா போட்டோ எடுத்தேன்னு சொன்னியே எங்க?''

''இனிமேதான் சார் பிரிண்ட் போடணும்...''

''முதல்ல போட்டுக் கொண்டுகிட்டு வா... 'பஞ்சமூர்த்தி மலையில் மர்மம்'னு போட்டு ஒரு கிழிகிழிப்போம். போலீஸ் பார்வைல படட்டும்...''

''சார்ர்...''

''என்ன...?''

''எதுக்கும் கொஞ்சம் யோசிச்சு எழுதுவோம் சார்...''

''என்னய்யா பயப்படறியா?''

''அனுபவிச்சவன் நான். அங்க மர்மம் இருக்கற மாதிரியும் இருக்கு. இல்லாத மாதிரியும் இருக்கு சார்...''

''ஒரு ரிப்போர்ட்டர் இப்படி ஸ்டெடி மைண்ட் இல்லாம பேசவே கூடாது. இப்படி இருந்தா எப்படிய்யா?''

பழனிக்குமார் செல்லமாய் கோபித்துக் கொண்டார்.

''சரி சார்... போய் பிரிண்ட் போட்டு எடுத்துக்கிட்டு வரேன் சார்...!''

நந்தகுமார் புறப்பட்டான்!

லேபில் பிரிண்டுக்காக ஃபிலிம் சுருளை உருவிக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தபோது அவன் மாமா குருமூர்த்தி வந்திருந்தார். பார்க்க படு பரபரப்பாக இருந்தார்.

''வாங்க மாமா... என்ன திடீர்னு வந்திருக்கீங்க?''

அவர் கண்களில் கண்ணீர் திரண்டு கொண்டிருந்தது.

''என்ன மாமா... நான் இப்ப என்ன தப்பா கேட்டுட்டேன்னு அழுவறீங்க?''

''நீ கேட்டதுக்காக அழுவலை நந்து... ஊர்ல உங்க அத்தை நிலை ரொம்ப மோசம்ப்பா.''

''ஐயய்யோ... என்னாச்சு?''

''அதை ஏம்ப்பா கேக்கறே... புத்து நோயாம்!''

''புத்து நோயா...? மை காட்... யார் சொன்னது? நல்ல டாக்டர்கிட்ட காட்னீங்களா?''

''பாண்டிச்சேரி ஜிப்மர்லையே காட்டிட்டேன். ரொம்ப முத்திப் போச்சு. ஒரு மாசம்கூட தாங்கா துன்னுட்டாங்க...''

மாமா மீண்டும் அழுதார். சில ஆண்கள் அழுதால் முகமே விகாரமாக இருக்கும். அவன் மாமாவும் அந்த ரகம்!

நந்தகுமாருக்கு தர்ம சங்கடமாகிப் போனது.

''சரி மாமா... இப்ப நான் என்ன பண்ணணும்?''

''உன் கைலதான் நந்து உன் அத்தையோட நிம்மதியே இருக்கு.''

''புரியும்படி சொல்லுங்க...''

''அவ தான் கண்ண மூடறதுக்குள்ள மகளோட கல்யாணத்தை பாத்துட ஆசைப்பட்றா!''

''யாருக்கு... உங்க மக அம்பிகாவுக்கா...?''

''ஆமாம்... நந்து. முறைப் பையன் நீ இருக்கும்போது அவசரத்துல நான் வெளிய எப்படிய்யா நல்ல இடத்தைப் பார்த்து முடிவெடுக்க முடியும்?''

மாமா எங்கு வருகிறார் என்பது அவனுக்குப் புரிந்தது. அதே சமயம் பஞ்சமூர்த்தி மலையில் பார்வதம்மாளை



புகைப்படம் எடுத்தபோது அவள் சொன்னதும் ஞாபகத்தில் வந்தது. 'எண்ணி பதினைந்து நாளில் திருமணம் ஆகப்போகிறது' என்றாளே!

அந்த நினைப்பே குபீர் என்கிற வியர்வையாய் அவன் முகத்தில் துளிர்த்தது.

''என்ன நந்து பேசமாட்டேங்கறே... சரின்னு சொல்லுப்பா... சாகக் கிடக்கற உன் அத்தைக்கு இந்த நிம்மதியாவது கிடைக்கட்டும்...''

மாமா பேசுவதெல்லாம் அவன் காதிலேயே விழவில்லை. பார்வதம்மா சொன்னதுதான் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'பார்வதம்மா யார்... உண்மையில் இயற்கையை விஞ்சி வாழும் ஒரு தெய்வப் பெண்ணா? நடப்பதைப் பார்த்தால் அப்படித்தானே தெரிகிறது.'

மௌனமாய் பொன்னியம்மன் கோவில் நினைப்பில் இருந்தவனை மாமா பிடித்து உலுக்கினார்.

''நந்து... தம்பி... என்னய்யா பேசமாட்டேங்கறே!''

''ஒண்ணுமில்ல மாமா... ஒண்ணுமில்ல.''

''இப்படி திடுதிப்புன்னு வந்து கல்யாணப் பேச்செடுக்கறேனேன்னு நினைச்சு சங்கடப்பட்றியா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல மாமா... ஆமா இதுல அம்பிகாவுக்கு சம்மதமா?''

''அவ ஒத்தக் கால்ல நிக்கறாப்பா...''

''அப்ப நீங்க வேண்டிய ஏற்பாட்டை செய்யுங்க.''

''ரொம்ப சந்தோஷம் நந்து. நீ இனிமே இந்த மெட்ராஸ்ல இப்படி தனியா ரூம்ல கஷ்டப்பட வேண்டாம். நானே நல்ல வீடு பார்த்து உங்களை குடி வைக்கறேன்.''

''அவசரப்படாதிங்க மாமா... எனக்கு இன்னும் நிரந்தரமான உத்யோகம் இல்ல. ஏதோ அலைஞ்சு திரிஞ்சு கண்டத எழுதி பொழைச்சுக்கிட்டிருக்கேன். அத்தையோட இக்கட்டான சூழ்நிலையை நினைச்சுதான் சம்மதிக்கறேன். இல்லேன்னா நிச்சயம் முடியாதுன்னு சொல்லிடுவேன்.''

''அதெல்லாம் எனக்கும் தெரியும். உனக்கு நல்ல வேலை வாங்கித் தர்றதும் என் பொறுப்பு. நீ கவலைப் படாதே.''

மாமா தெம்பாக பேசி தட்டிக்கொடுத்தார். அதன்பின் உட்காரக்கூட அவகாசம் இல்லாதவராக 'அடுத்த வேலையை பார்க்கிறேன்' என்று கிளம்பியும் போனார்.

அவர் அந்த பக்கம் போயிருப்பார்.

இந்தப் பக்கமாய் போட்டோ லேபில் இருந்து ஒரு பையன் வந்து நின்றான்.

''சார்... நீங்க பிரிண்ட் போட ஃபிலிம் கொடுத்துருந் திங்கதானே?''

''ஆமாம்... பிரிண்ட் போட்டாச்சா...?''

''போட்டாச்சு சார்... ஆனா, ஒரு போட்டோகூட உழுவலை சார். எல்லாமே ஃபேட் ஆயி பிளாக்கா இருக்கு சார்... முதலாளி வேற எதாவது ஃபிலிமை கொடுத்துட்டீங்களான்னு கேட்டுட்டு வரச்சொன்னார்.''

அந்தப் பையன் சொன்னது நந்தகுமாரின் நெஞ்சில் ஒரு குத்து குத்தியது. ''நிஜமாவா...?'' - என்று கேட்டுவிட்டு அவன் கூடவே ஸ்டுடியோவிற்கு கிளம்பினான்.

ஸ்டுடியோ ஓனர் சிரித்தபடியே ''என்ன நந்து... ஒரு படம்கூட உழுவலையே...''-என்று பிரிண்டுகளைக் காட்டினார். அவ்வளவிலும் கட்டி இருட்டு.



''ஆச்சரியமா இருக்கே... ஃப்ளாஷ் போட்டு தெளிவாகத்தானே எடுத்தேன். ஃபிலிம்ல எதாவது கோளாறா?''

''அதை எல்லாம் பாக்காம இருப்பேனா... ஃபிலிம் நல்ல ஃபிலிம்தான்.''

''கேமராவுல எதாவது ஃபால்டா?''

''இல்லையே...''-என்றபடி கேமராவை எடுத்து நீட்ட, வாங்கி பார்த்தார். பட்டனைத் தட்டியதில் முகத்தில் தெறித்தது ஃப்ளாஷ்! குட்டி மானிட்டரிலும் ஒன்று என்று ஒரு சதுரம் நகர்ந்ததற்கான பதிவு எண்!

''நல்லாத்தானே இருக்கு...'' என்றார். ஆச்சரியம் விலகாதபடி அங்கிருந்து நகர்ந்தவன் தொலைபேசியைத் தொட்டான். மறுமுனையில் பழனிக்குமாரை பிடித்தான்.

''சார்! ஒரு போட்டோ ஃபிலிம்கூட உழுவலை சார். எல்லாமே ஃபேட் ஆயிடுச்சு...''

''அப்படியா...?''

''ஆமாம் சார். அதோட நான் பர்வதம்மாவை சந்திச்சப்போ 'உனக்கு பதினைஞ்சு நாள்ல கல்யாணம் நடக்கப் போகுது. போய் வேலையைப் பாரு'ன்னு சொன்னாங்க. அதுவும் உண்மையாகப் போகுது சார்...''

''என்னய்யா உளர்றே...?''

-நந்தகுமார் விளக்கி முடித்தான்.

பழனிக்குமார் மறுமுனையில் ''ஒரே மாயாஜாலமா இருக்குதேய்யா...'' என்று சீரியஸாவது தெரிந்தது.

''சார் எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல சார்...''

''பதட்டப்படாதே... என்னன்னு யோசிப்போம். ஆமா... உனக்கு இப்ப வேற எதாவது வேலை இருக்குதா...?''

''எதுக்கு சார் கேக்கறீங்க...?''

''எதுவும் முக்கியமான வேலை இல்லைன்னா கிளம்பு. நானும் உன்கூட வரேன். பஞ்சமூர்த்தி மலைக்குப் போவோம். அந்த பர்வதம்மாவையே பார்த்து கேட்போம்.''

''நானும் அவங்கள பாக்கத்தான் ஆசைப்பட்டேன். ஆனா அந்த குகைக்குள்ள நுழையறத நினைச்சாலே பயமா இருக்கு சார்...''

''பயப்படாதே... உனக்கு கல்யாணம் ஆகும்னு சொல்லியிருக்காங்க. ஆகையால அதுக்கு நடுவுல உனக்கு எந்த கெடுதலும் நடக்க அவங்க வாக்குப்படியே எந்த வாய்ப்பும் இல்லை. என்னாலையும் இவ்வளவையும் கேட்டுட்டு சும்மா இருக்க முடியலை. அங்க நிஜமா என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டே ஆகணும். அப்படி தெரிஞ்சுக்கிட்டா உன் விஷயமே ஒரு கவர்ஸ்டோரியா யிடும்.''

''வேற மாதிரி எதாவது ஆயிட்டா...?''

''நீ ரொம்ப பயப்பட்றே... நான் இருக்கேன். நீ வா!''

-அவர் தீர்மானமாய் சொல்லிவிட்டு போனை வைத்தார். நந்தகுமாருக்கு ஒரு தடுமாற்றமாகிவிட்டது. வாழ்க்கையே ஒரு புதிய திசை நோக்கி நகருகிற மாதிரி தோன்றியது.

கடவுளே...!



## 8

**வை**த்தியர் வீடு!

வைத்தியர் அண்ணாமலை உரலில் எதையோ போட்டு இடித்துக் கொண்டிருந்தார். கூடவே நின்றபடி ஒத்தாசித்துக் கொண்டிருந்தான் அவரது உதவியாளன் மாமுண்டி.

விலுவிலுவென்று ஒற்றை நாடி சரீரமும் நல்ல உயரமுமாய் இருந்த மாமுண்டி ஒரு குப்பைத் தொட்டி அருகில் ஒருநாள் சாகக் கிடந்தான். உடம்பெல்லாம் சிழ்பிடித்து சிரங்கும் சொறியுமாய்க் கிடந்தவனைப் பார்த்துவிட்டு மனது கேட்காமல் தூக்கி வந்து குணப் படுத்தியது வைத்தியர்தான்.

ஒரு விதத்தில் தன்வசம் உள்ள சில மூலிகைகளை வைத்து அவனிடம் பரீட்சை செய்து பார்த்தார் என்றுகூட சொல்லலாம்.

மாமுண்டியின் நல்லவேளை அந்த மூலிகைகள் அவனை முழு மனிதனாக்கி அவருக்கு வேலைக் காரனாகவும் ஆக்கிவிட்டது.

அவரை விட்டுச் செல்ல அவனுக்கு போக்கிடமும் இல்லை. அவர் எதைச் சொன்னாலும் செய்தான்.

''போய் அந்த படிகாரக் கல்லை எடுத்துகிட்டு வா...'' என்றார் அவரும். அங்கிருந்து அகன்றான். வீட்டுக்கு வெளியே சில மூலிகைகளைக் காய வைத்திருந்தார். ஒரு இடத்தில் படிகாரக் கல்லை அரைத்து மாவுபோல் ஆக்கி அதையும் நிழலில் காயவைத்திருந்தார்.

அதை எடுப்பதற்காக அவன் சென்ற போது வைத்தியர் வீட்டு வாசலில் கார் ஒன்று தேங்கி நின்றது.

உள்ளே இருந்து இரண்டு பேர் இறங்கினார்கள். ஒருவர் வெள்ளைக்காரர். இன்னொருவர் அடிக்கடி வைத்தியரை வந்து பார்த்துவிட்டுப் போகும் டாக்டர் செல்லமுத்து.

''என்னய்யா வைத்தியர் இருக்காரா...?'' -என்று கேட்டபடி அந்த வெள்ளைக்காரருடன் உள்ளே நுழைந்தார் செல்லமுத்து. வைத்தியர் அண்ணாமலையும் அவர்கள் இருவரையும் பார்த்துவிட்டு பிரகாசமாய் சிரித்தபடி வரவேற்க ஆரம்பித்தார்.

''வாங்க டாக்டர்...''

''வர்றது இருக்கட்டும்... யார் வந்துருக்காங்கன்னு பாருங்க...'' -டாக்டர் செல்லமுத்து அந்த வெள்ளைக்காரரை காட்டிச் சிரித்தார்.

''சார் யாரு?''

''பாத்தா தெரியல...அமெரிக்காவுல இருந்து வந்துருக்காரு. இவரும் ஒரு டாக்டர்தான். பேர் ஜோன்ஸ்.''

''அப்படியா ரொம்ப சந்தோஷம்...''

-அண்ணாமலை ஜோன்ஸிடம் கைகுலுக்கினார்.

''உங்களை சந்திச்சதுல ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி...''

-ஜோன்ஸ் அதிசயமாக தமிழ் பேசினார்.

''இவருக்கு தமிழ்கூடத் தெரியுமா?''

''நல்லா... சித்தர்பாடல்கள்ல இருந்து சிலப்பதிகாரம், மணிமேகலை வரை அப்படியே ஒப்பிப்பாரு!''

''ஆச்சரியமாயிருக்கே...''



''நமக்குத்தான் இதெல்லாம் ஆச்சரியம். ஜோன்ஸுக்கு இதெல்லாம் சுண்டைக்காய்...''

''சரி... என்ன விஷயமாய் இந்த நாட்டு வைத்யன பாக்க வந்துருக்கீங்க...?''

''காரணமாத்தான். டாக்டர் ஜோன்ஸ் நம்ம நாட்டு மூலிகைகளைப் பத்தி ஆராய்ச்சி செய்துக்கிட்டிருக்கார். அதுல கிட்டத்தட்ட ஒரு முடிவுக்கும் வந்துட்டாரு. இருந்தாலும் மாயமூலிகைகள் பத்தி அவருக்கு கொஞ்சம் குழப்பமிருக்கு...''

-டாக்டர் செல்லமுத்து லகுவாக விஷயத்துக்கு வந்தார்.

''அதுக்கு நான் என்ன பண்ணனும்?''

''உங்களுக்குத்தான் நிறைய மாய மூலிகைகள் பத்தி தெரியுமே. அதான் கூட்டிக்கிட்டு வந்தேன்.''

-செல்லமுத்து முடிக்க, அண்ணாமலைக்கு கொஞ்சம் சுருக்கென்றது. சற்று முறைப்பாக செல்லமுத்துவைப் பார்த்தார்.

''என்ன பார்க்கறீங்க அண்ணாமலை...''

''எனக்கு மாயமூலிகை பத்தியெல்லாம் எதுவும் தெரியாது செல்லமுத்து. சாதாரண மூலிகைச் செடியைப் பறிக்கவே நான் படாதபாடு பட்டுக்கிட்டிருக்கேன்...''

அண்ணாமலை சொல்லவும் செல்லமுத்துவின் இதழ்க்கடையில் ஒரு கேலிப் புன்னகை இழையோடியது.

''நிஜமா டாக்டர்... எனக்கு அதெல்லாம் ஒண்ணும் தெரியாது. நான் என்ன சித்தனா...-''

''வேண்டாம் அண்ணாமலை. இதோ இந்த மாமுண்டி எப்படிக் கிடந்தான்னு எனக்கும் தெரியும். இவன்

உடம்பெல்லாம் அழுகிப் போயிடுச்சு. இந்த ஊர்ல இவன் பிச்சை எடுத்துத் திரிஞ்சது ஊருக்கே தெரியும். குன்மம் வந்து இவன் கையும் காலும் இருந்த இருப்பைப் பார்த்து முகம் சுளிக்காதவங்களே இல்லை. அப்படிப்பட்ட இவனையே ஒரு மண்டலத்துல நீங்க குணப்படுத்தியிருக்கீங்க. சாதாரண மூலிகையால முடியற விஷயமா அது?''

-செல்லமுத்து மலைப்பாம்புபோல வளைக்கத் தொடங்கினார்.

''அது... அது...''

''பயப்படாதீங்க... நம்ம டாக்டர் ஒண்ணும் சாதாரண ஆள் இல்லை. மாய மூலிகைல ஒண்ணே ஒண்ணு பத்தி தெரிஞ்சாக்கூட போதும். ஒரு மூலிகைக்கு உங்களுக்கு பத்து லட்சம் ரூபா தரத் தயாரா இருக்கார்.''

''நீங்க புரியாம பேசறீங்க... மாமுண்டி உடம்புல இருந்தது சாதாரண சொறி சிரங்கு. கத்தாழை வைத்தியம் ஒண்ணு போதும் - அதை குணப்படுத்த... கூட நான் சிலந்தி நாயகனையும் சேர்த்துக்கிட்டேன். அவ்வளவுதான்...!''

-அண்ணாமலை அழுத்தமாக மறுத்தும் டாக்டர் செல்லமுத்துவிடம் எந்த மாற்றமும் இல்லை

''எதுக்கு அனாவசியமா பயப்பட்றீங்க. மாயமூலிகை பத்தி வெளிய தெரியக்கூடாதுன்னும் ஏன் நினைக்கறீங்க?''

''இதோ பாருங்க டாக்டர். மாய மூலிகைகளை நீங்களோ, நானோல்லாம் அடைய முடியாது. அதுக்கு கடவுளோட அனுக்ரகம் வேணும். அது சுயநலமில்லாத சித்தர்கள் கண்ணுக்குத்தான் கிடைக்கும். இதை புரிஞ்சுக்குங்க. நான் ஒரு சராசரி வைத்தியன்.''

''அண்ணாமலை... திரும்ப சொல்றேன். ஒரு மூலிகைக்கு பத்து லட்ச ரூபாய். டாக்டர் ஜோன்ஸுக்கு ஒரு



மூலிகை மட்டும் தெரிஞ்சாக்கூட போதும். அதை வெச்சு அவர் எவ்வளவோ மருந்து கண்டுபிடிச்சுடுவாரு.''

''நானும் திரும்ப சொல்றேன். எனக்கு ஒரு மூலிகை பத்தியும் தெரியாது. உங்களுக்கு தெரியணும்னா காட்டுக்குள்ற நீங்க போங்க. கண்டுபிடிச்சுக்குங்க.''

''அப்ப இதுதான் உங்க முடிவான பதிலா...?''

''ஆமா...!''

''அப்ப சரி... மிஸ்டர் ஜோன்ஸ்! லெட் அஸ் மூவ். நாம மலைக்கு மேல போவோம். மேல பர்வதம்மான்னு ஒரு லேடி இருக்காங்க. 'கன்னிக்காலி'ன்னு ஒரு மாய மூலிகையால அவங்க ஒரு சின்னப் பொண்ணாகவே இருக்காங்க. அவங்கள மீட் பண்ணுவோம்.''

-டாக்டர் செல்லமுத்து பர்வதம்மா பற்றி பேசவும் அண்ணாமலைக்கு பகீரென்றது.

''டாக்டர்... உங்களுக்கு என்ன பைத்தியமா? பர்வதம்மாவை பாக்கறது பேசறதுல்லாம் லேசுப்பட்ட விஷயமில்லை.''

''அது எனக்கும் தெரியும். ஜோன்ஸ் எல்லாவித எக்ஸ்பீரியன்ஸையும் எதிர்பார்த்துதான் வந்துருக்கார்.''

''வேண்டாம்... இப்பவே வெள்ளைக்காரங்க மஞ்சள், வேம்பு எல்லாத்துக்கும் பேடண்ட் ரைட்ஸ் வாங்கி வெச்சுக்கிட்டு கலாட்டா பண்ணிக்கிட்டு இருக்காங்க. நீங்ககூட மாய மூலிகைகள் பத்தி தெரிஞ்சுக்க ஆசைப்படலாம். ஆனா, ஒரு வெள்ளைக்காரனுக்கு மட்டும் அது தெரியவே கூடாது!''

ஜோன்ஸுக்கு அதைக் கேட்க கோபம் வந்தது.

''லுக் மிஸ்டர் அண்ணாமலை. ஏஸ் எஹ்யூமன் பீயிங் இந்த உலகத்துல விளையற ஒரு மூலிகை பத்தி யார் வேணா

எப்ப வேணா தெரிஞ்சுக்கலாம். அது பொது சொத்து. நான் மெடிசின் பண்ணத்தான் மேன் அதை தெரிஞ்சுக்க விரும்பறேன். மெடிசின் செய்தா அதால யாருக்கு லாபம்? சொஸைட்டிக்குதானே?''

''ஒரு லாபமும் கிடையாது. எங்க மூலிகையை வெச்சு எங்ககிட்டையே கோடிக்கணக்குல லாபம் சம்பாதிப்பீங்க. மூலிகைங்கறது கடவுளோட கருணை. அதை விலைக்கு விக்கவோ, வாங்கவோ யாருக்கும் உரிமை கிடையாது.''

-அண்ணாமலை பதிலுக்கு சீறினார்.

''வேண்டாம்... விட்ருங்க. நீங்க இவ்வளவு பொசஸிவா இருப்பீங்கன்னு நாங்க நினைக்கல. நாங்க பர்வதம்மாவைப் பாத்து பேசிக்கறோம்...''

''போங்க... போங்க... நானாவது பேச்சோட உங்கள விட்டேன். அவங்க கடவுளோட அம்சம். உங்களை தண்டிக்காம விடமாட்டாங்க...''

-வைத்தியர் அண்ணாமலை சபதம் போடுவதுபோல சொல்ல செல்லமுத்துவும் ஜோன்ஸூம் ஏமாற்றமுடன் திரும்பி காரில் ஏறிக் கொண்டு புறப்பட்டனர்.

பார்த்துக் கொண்டேயிருந்த அண்ணாமலையை மாமுண்டியும் வெறித்தான்.

''மாமுண்டி... நீ வீட்டைப் பாத்துக்கோ. நான் மேலவரை போய்ட்டு வரேன்.'' - என்றவர் விறுவிறுவென்று உள்ளே நுழைந்து பரண்மேல் கிடந்த வேர்க்கட்டு ஒன்றை எடுத்தார்.

அதைக் கையில் பிடித்தபடி நடக்க ஆரம்பித்தார். சிறிது தூரம்தான்! மாமுண்டி எதற்கோ திரும்பிவிட்டு திரும்ப அவரைப் பார்த்தபோது வைத்தியரைக் காணவில்லை!



# 9

பஞ்சமூர்த்தி மலையின் மேல் தளம்!

பசுமாட்டு மடியை முட்டும் கன்றுபோல மலை உச்சியில் மேகக்கூட்டங்கள் முட்டிக் கொண்டிருந்தன. அப்பொழுதுதான் நுழைந்த பஸ்ஸில் இருந்து உதிர்ந்தனர் பழனிக்குமாரும்-நந்தகுமாரும்!

பஸ்ஸைவிட்டு இறங்கிய இடத்தில் ஏகத்துக்கும் பலாப்பழக் கடைகள், தொங்கும் வாழைத்தார்கள், குவிந்துகிடக்கும் அன்னாசிப் பழங்கள்!

ஜில்லென்ற க்ளைமேட்!

''அட்டகாசமான இடமா இருக்குல்ல...?'' . பழனிக்குமார், நந்தகுமாரைப் பார்த்து ஸ்லாகித்துக் கொண்டார்.

''இந்த அழகுக்குப் பின்னாலதான் சார் புரிஞ்சுக்க முடியாத மர்மம்லாம் இருக்குது.''

''இனிமே புரிஞ்சுக்க முடியாத'ன்னு சொல்லாதே. புரிஞ்சுக்க வேண்டிய மர்மங்கள்னு சொல்லு.''

''என்னவோ சார்... எனக்கு பக்குபக்குன்னுதான் இருக்கு.'' - பேசியபடி நடந்தனர்.

''ஆமா... அந்த குகைக்கு போற வழி உனக்கு தெரியும்தானே?''

''என்ன சார் கேள்வி... தெரியாமத்தான் அங்கே நான் போனேனா?''

''எப்படி இருந்தது குகை...?''

''இது ஒரு கேள்வியா சார்... எவ்வளவு சினிமாவுல பாத்துருப்பீங்க...?''

''அது ஏன்னு தெரியல... சாமியார்னா அவங்க குகைலதான் இருக்காங்க.''

''இயற்கையோட கன்ஸ்டரக்ஷன். வாடகை கிடையாது. மழை காத்தும் ஒண்ணும் பண்ணாது. அதுதானே சார் சௌகரியம்.''

''அந்த சௌகர்யம் மனுஷங்களுக்கு மட்டுமில்ல, மிருகங்களுக்கும்தான். பெரும்பாலும் சிங்கங்கள் குகைகள்லதான் வசிக்கும்...''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க?''

''குகைல வசிக்கிறதுல ஆபத்தும் இருக்குன்னு சொல்ல வரேன். அதே சமயம் நீ ஏதாவது மிருகம் பதுங்கியிருக்கிற குகையைப் பார்த்துட்டு பயந்து ஓடிவந்துட்டியோன்னும் நினைக்கறேன்.''

''இல்ல சார்... நான் பர்வதம்மாவோட குகைக்குள்ளதான் நுழைஞ்சேன்.''

''அது சரி... அந்த குகைக்குள்ளே நுழைஞ்ச ஒருத்தன் கண் தெரியாம இருந்தான்னு சொன்னியே... அவனை பார்க்க முடியுமா?''

''தாராளமா... கோவிலுக்கு போனா பாக்கலாம்.''

''அவனையுமா போட்டோ எடுத்தே?''

''ஆமாம் சார்...''

''அவனோட படம்கூடவா விழலை?''

''ஆமாம் சார்...''

''கேமராஃபால்ட் இல்லையே...''



''நிச்சயமா இல்லை. இதோ...''

-நந்தகுமார் நீட்ட பழனிக்குமார் வாங்கிப் பார்த்தார்.

''இப்ப இதுல ஃபிலிமை லோட் பண்ணியிருக்கியா?''

''ஆமாம் சார்...''

''நில்லு... உன்னை ஒரு படம் எடுக்கறேன்.''

''எதுக்கு சார்...''

''நில்லுப்பா... என்னோட பரீட்சையை உன்கிட்ட இருந்தே ஆரம்பிக்கறேன்.''

-பழனிக்குமார் பேசிக் கொண்டே கேமரா வியூஃபைண்டர் வழியாகப் பார்த்து ஒரு க்ளிக்... சப்தம் தெளிவாகக் கேட்டது. கூடவே கோவில் மணி சப்தமும் காதில் விழுந்தது.

''மணி சப்தம் கேட்குதே... இந்த கோவில்தானா?''

''ஆமாம் சார்...''

-வேகமாய் இருவரும் நடக்கத் தொடங்கினர். ஆச்சரியமாய் பல விஷயங்கள் கண்ணில் பட்டன.

ஒரு மூங்கிலை இருவர் தோளில் சுமந்தபடி செல்ல மூங்கில் நடுவில் ஒரு தொட்டில். அதில் ஒரு முதியவர் படுத்திருந்திருந்தார். விசாரித்தனர்.

''அவருக்கு வயசு நூத்து பத்து ஆவுதுங்க. அவ்வளவா நடமாட முடியலை. அதனால அவரை தூக்கிகிட்டு போறாங்க...''

''ஏன் தள்ளுவண்டியெல்லாம் எதுவும் இல்லையா?''

''அதெல்லாம் இங்க எதுக்குங்க... அத்தோட மலைக்காட்டுக்குள்ள வண்டியை தள்ளிகிட்டு போக சிரான பாதை வேண்டாமா?''

-அந்த பதில் பஞ்சமூர்த்தி மலை இன்னும் சரியான சாலை வசதிகூட இல்லாதபடி இருப்பதை சொல்லாமல் சொன்னது.

''சார்... இதுகூட ஒரு விஷயம்தான்-கட்டுரை எழுதலாம். ஒரு போட்டோ எடுத்துக்கலாமா?''

''கேக்காதே... எடு...''

அடுத்த நொடி க்ளிக்!

படுத்தபடி பயணம் செய்யும் கிழவர் துலியை ஒதுக்கிப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தார்.

நந்தகுமாரும், பழனிக்குமாரும்கூட பதிலுக்கு சிரித்தனர்.

அடுத்த ஆச்சரியமாய் ஒரு பெண்ணின் தலைமேல் வரிசையாய் விழுந்துவிடாதபடி ஏழெட்டுப் பானைகள்.

விழுந்தால் சுக்கு நூறுதான்!

ஆனால் அவளோ சர்வ சாதாரணமாய் பேலன்ஸ் செய்தபடி நடந்து கொண்டிருந்தாள்.

''சார் இது அடுத்த ஆச்சரியம் சார்!''

''ஆச்சரியம் மட்டுமில்ல நந்தா... இதுதான் மனித சக்தியோட உச்சம்.''

''இவங்க பேசாம சர்க்கஸ்ல சேரலாம்.'' -விளையாட்டாக பேசிக் கொண்டு நடந்தாலும் நந்தகுமாருக்கு கடுக்கடுக்கென்றுதான் இருந்தது.

கோவில் கோபுரமும் கண்ணில் பட்டது.

கோவிலுக்கு முன்னால் ஒரு கார்!

கீழே வைத்தியர் வீட்டுக்கு வந்த டாக்டர் செல்லமுத்துவும் வெள்ளைக்காரர் ஜோன்சும் ஏறிவந்த அதே கார்.



''என்னப்பா... நம்மைப்போல சிட்டியில இருந்து யாரோ கோவிலுக்கு வந்துருக்கற மாதிரி தெரியுது!''

''ஆமாம் சார்... அப்படித்தான் தெரியுது...''

நந்தகுமார் ஆமோதிக்க கோவில் வாசலை எட்டிப்பிடித்தனர். கடைக்காரர்கள் தேங்காய்ப் பழத்தட்டுக் களை எடுத்து நீட்டினார்கள்.

யாரும் நந்தகுமாரை இதற்கு முன் பார்த்த மாதிரியே காட்டிக்கொள்ளவில்லை.

அதுவே நந்தகுமாருக்கு ஆச்சரியம்தான்.

அவர்களை மறுத்துவிட்டு உள்ளே நுழைந்தான். உள்ளே இருந்து ஜோன்சும், செல்லமுத்துவும் வெளியே செல்வதற்காக வந்து கொண்டிருந்தனர்.

அறிமுகம் இல்லாததால் பேசிக்கொள்ள வழியில்லாதபடி வெளியேறியும் சென்றனர்.

''பரவால்ல சார்... இந்த மலைக்கு வெள்ளைக்காரங்கெல்லாம்கூட வர ஆரம்பிச்சுட்டாங்க...''

''அவங்கதான் நம்ம கல்ச்சரை உண்மையா ரசிக்கற வங்க.''

-பேச்சோடு ஊர் பாசத்தை பழனிக்குமார் அளந்தார். அப்படியே நந்தகுமாரிடம் ''ஆமா எங்க அந்த குருட்டு மனிதர்?''-கேட்டார்.

''இங்கதான்-இந்த கோவில் மண்டபத்துலதான் பார்த்தேன்.''

-நந்தகுமாரும் பார்வையை சுழற்றித் தேடினான்.

மண்டபத்தில் ஒருவர் படுத்திருந்தார்.

''சார்... அதோ...'' - ஓடினான் நந்தகுமார்.

நெருங்கியவன் படுத்திருந்த அந்த மனிதரின் தோளைத் தொட்டு உசுப்ப, அவரும் விழித்து எழுந்தார். இதற்கு முன் கண்தெரியாதபடி கண்ணில் மூலிகையை வைத்துக் கட்டிக் கொண்டு அங்கே அமர்ந்திருந்த அதே மனிதர்தான்.

ஆனால் இப்பொழுது கண்ணில் மூலிகை எல்லாம் இல்லை. பார்வையும் பளிச்சென்று இருந்தது.

''யார் சார் நீங்க... என்ன வேணும்?''-அவரிடம் கேள்வி வேறு.

''சார்...உங்களுக்கு கண் பார்வை வந்துடிச்சா?''

-நந்தகுமார் ஆவலாய் விசாரித்தான்.

''நீங்க என்ன கேக்கறீங்க...?''-இது அந்த மனிதர்.

''என்ன சார் நீங்க... என்னைத் தெரியல? இரண்டுநாள் முந்திகூட வந்தேனே...''

''சரி அதுக்கென்ன?''

''அதுக்கென்னவா...? உங்களுக்கு கண்ணு எப்படி வந்தது?''

''என் கண்ணுக்கு என்ன வந்துச்சு. நான் நல்லாத்தானே இருக்கேன்?''-அந்த மனிதரின் பதில் நந்தகுமாரின் கன்னத்தில் அறைந்தது. பழனிக்குமாரும் குழம்பினார்.

''நல்லாத்தான் இருந்தீங்களா...? என்ன சார் நீங்க! இரண்டு நாளைக்கு முந்தி நான் பார்த்தப்போ கண்ணுல மூலிகையை கட்டிக்கிட்டு தவிச்சுகிட்டிருந்தீங்களே!''

''நானா...? தவிச்சுக்கிட்டிருந்தேனா...? என்ன சார் இது உளறல்?''

''நான் உளர்றேனா...?'' - நந்தகுமார் பல்லைக் கடித்தான். கையைப் பிசைந்தான். பழனிக்குமாரும் ஒரு மாதிரி பார்த்தார்.



37671
546927

''சார் அப்படிப் பாக்காதீங்க... இந்த ஆள்தான் கண்ணு தெரியாம கிடந்து அல்லாடிக்கிட்டிருந்தார். சந்தேகமா இருந்தா பூசாரியைக்கூட கேட்டுப்பாருங்க...''

-நந்தகுமார் அடுத்து பூசாரி எங்கே என்று கேட்டுக் கொண்டு சன்னதி நோக்கிச் சென்றான். பூசாரியும் சன்னதி முன் அமர்ந்துகொண்டு ஏதோ ஒரு பழைய புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தார். நந்தகுமாரும் பழனிக்குமாரும் திபுதிபுவென்று ஓட்டமும் நடையுமாக வருவதைப் பார்த்து நிமிர்ந்தார்.

''பூசாரி... எப்படி இருக்கீங்க...?''

''நல்லாருக்கேன்... நீங்க யாரு?''-பூசாரி அப்படிக் கேட்பார் என்று எதிர்பார்க்கவில்லை அவன். முகம் இருண்டு போயிற்று.

''என்ன பூசாரி... என்னைத் தெரியலியா?''

-அலறினான் நந்து.

''தெரியலியே தம்பி... யார் நீங்க?''

''என்னய்யா இது பெரிய மாயா பஜாரா இருக்கு... இரண்டு நாள் முந்தி வந்து போட்டோல்லாம்கூட எடுத்தேனே. நீங்ககூட அதெல்லாம் தப்புன்னு சொல்லலை...?''

''இல்லியே... ஆமா தம்பிக்கு ஏதாவது சித்தப் பிரமையா?''

-பூசாரி பழனிக்குமார் பக்கம் திரும்பினார். நந்தகுமாருக்கு அந்தக் கேள்வியே ஒரு மினி இடியாகத்தான் இருந்தது.

''என்ன நந்து... இவங்கல்லாம் உன்னை சுத்தமா தெரியலைங்கறாங்க. நீ இந்த கோவிலுக்குத்தான் வந்தியா-

இல்லை வேற எதாவது கோவிலுக்குப் போய் ஞாபக மறதியா குழப்பிக்கறியா?''

-பழனிக்குமாரும் காலை வாரினார்.

''சார், இவங்க அவ்வளவு பேரும் நடிக்கிறாங்க. நான் இந்த ஊர் கோவிலுக்கு... அதுவும் இந்த கோவிலுக்குத்தான் சார் வந்தேன்.''

-நந்தகுமார் பரிதவிக்கச் சொன்னது பழனிக் குமாரையே என்னவோ செய்தது.

''ஆமா, என்ன விஷயம் தம்பி... இப்ப இவர் இங்க வந்தாரு; வரலை... அதனால என்ன?''-பூசாரி சாங்கோபாங்கமாக விசாரிக்க ஆரம்பித்தார்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. நாங்க பத்திரிகை யாளர்கள். ஒரு கட்டுரைக்காக இந்த மலை - அப்புறம் இங்க வசிக்கிற பர்வதம்மா பற்றி கேள்விப்பட்டு இங்க வந்துருக்கோம். அவ்வளவுதான்.''

''அப்படிங்களா... அம்மாவை பாக்கவந்தீங்களா?''

''ஆமாம்... அவங்ககூட ஏதோ ஒரு குகையில் இருக்கறதா கேள்விப்பட்டோம்.''

''குகையிலையா...? அவங்களா...? இல்லையே!''

-பூசாரி முகம்போன விதமும் அதில் அவர் கேள்வி களை அடுக்கிய விதமும் நந்தகுமாருக்குள் பெட்ரோலை ஊற்றி எரித்ததுபோல எரிச்சலை உருவாக்கியது.

''பூசாரி... பிரமாதமா நடிக்கிறிய்யா... சார் நம்பாதீங்க. இந்த ஆள் நடிக்கறான்.''

''ஸ்ஸ்... சும்மா இரு நந்து. நான் பேசிக்கிட்டு இருக்கேன்ல... ஐயா நீங்க சொல்லுங்க. அப்ப பர்வதம்மா எங்க இருக்காங்க?''



''இங்க பக்கத்துலதாங்க இருக்கு அவங்க குடிசை. இப்ப போனாக்கூட பாக்கலாம்.''

''அப்படியா... என்னமோ அவங்கள பாக்கறதே கஷ்டம் வருஷத்துக்கு ஒரு தடவையோ இரண்டு தடவையோதான் பாக்கலாம்னு கேள்விப்பட்டோமே...''

''யாரோ தப்பா சொல்லியிருக்காங்க. அம்மாவை எப்ப வேணும்னாலும், யார் வேணும்னாலும் பார்க்கலாம். அவங்களப் பாத்தா நாம செஞ்ச பாவமும் பறந்தோடிடும்.''

''ஓஹோ... ஆமா அவங்களுக்கு இப்ப எவ்வளவு வயசிருக்கும்?''

''என்ன... ஒரு நூறு நூத்திபத்து வயசு இருக்கலாம்.''

''கரெக்ட்... ஆனாலும் ரொம்ப இளமையா இருப்பாங்களாமே அப்படியா?''

''அப்படியெல்லாம் இல்லீங்களே...''

''அதுதானே அவங்ககிட்ட ஹைலைட்டான விஷயமே.''

''அப்படின்னா...?''

''அதாவது... அவங்க இளமையா இருக்கறதுதான் ஆச்சரியமான-தெய்வீகமான விஷயம்னு கேள்விப் பட்டோம்னு சொல்ல வந்தேன்.''

''அப்படியெல்லாம் இல்லீங்களே... நீங்களே போய் பாருங்க. உங்களுக்கு தானா தெரிஞ்சுகிட்டு போகுது.''

-பூசாரி மிக மிக சாதாரணமாக-எந்தவித நெருடலும் குழப்பமுமின்றி பேசியதைத் தொடர்ந்து பழனிக்குமார் மீண்டும் நந்தகுமாரைப் பார்த்தார்.

அவன் நெற்றியை தேய்த்துக் கொண்டிருந்தான்.

''நந்தா... போய்ப் பார்க்கலாமா?''

''போலாம் சார்... போலாம். அங்க என்ன கூத்து நடக்குதுன்னு பாக்கறேன். வாங்க...''

''அப்ப நாங்க வரோம்யா...''

''நல்லதுங்க... ஆமா இவ்வளவுதூரம் வந்துட்டு சாமி கும்பிடாம போறீங்களே.''

-பூசாரி இணக்கமாய் கேட்க, பழனிக்குமார் ''தப்புதான்...'' என்றபடி சன்னதி முன்போய் நின்றார். கூடவே குழப்பம் கலையாதபடி நந்தகுமாரும் போய் நின்றான்.

சன்னதியில் பூசாரி கற்பூர ஆரத்தி காட்டிவிட்டு தட்டை எடுத்து வந்தார். கண்களில் ஒற்றிக் கொண்ட பழனிக்குமார் தட்டில் ஒரு பத்து ரூபாயைப் போட்டார்.

''தம்பி... தயவு செய்து தப்பா எடுத்துக்காம இந்த பணத்தை எடுத்து ஆத்தா உண்டியல்ல போட்டுட்றீங்களா?''

-பூசாரி ஆச்சரியமளித்தார்.

''ஏன்... தட்டுல போடக்கூடாதா?''

''அப்படி இல்லை... இங்க நான் நல்ல சௌகர்யத்தோட இருக்கேன். காணிக்கை வாங்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.''

''என் வாழ்க்கைல இப்படி ஒரு பதிலைச் சொன்ன ஒரே பூசாரி நீங்கதான்.''

''இருக்கலாம். ஆத்தா என்னை சௌகர்யமா வெச்சிருக்கும்போது எனக்கு எதுக்கு பிச்சைக்காசு?''

''அப்ப நீங்க சௌகர்யமா இருக்கீங்களா?''

''நிச்சயமா... இங்க நான் மட்டுமல்ல. எல்லாருமே நல்ல சௌகர்யத்தோட இருக்கோம்.''



''புளுகாதீங்க... நான் போன தடவை ஐம்பது ரூபா போட்டப்போ உச்சி குளிர்ந்து என்னென்ன பேசினீங்க? இப்ப என்ன... மனசுல பெரிய குபேரன்னு நினைப்பா?''

-நந்தகுமார் திரும்பவும் உக்கிரமாகி வெடித்தான்.

''தம்பி வந்ததுல இருந்து தப்புத் தப்பாவே பேசுது. அதுக்கு ஏதாவது மனக்குழப்பமா-''

-பூசாரி வகையாக திருப்பி அவன் எறிந்த அம்பை அவனுக்கே திருப்பினார். பழனிக்குமார் மீண்டும் நந்தகுமாரைப் பார்த்தார். நந்தகுமார் கூசிப்போனான். கண்களில் கோபமும் ஆத்திரமும் கூட்டணி அமைத்து முகத்தை சிவப்பாக்கிவிட்டிருந்தன.

''டென்ஷனாகாதே நந்தகுமார். சம்திங்ராங். அது உன்கிட்டையா - இங்கையான்னு தெரியலை. சரி வா போகலாம்.'' - என்றபடி நடந்தார்.

நந்தகுமார் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தான்.

பூசாரி முகத்தில் ஒருவித மர்மப் புன்னகை.

## 10

**ப**ர்வதம்மாளின் குடிசை முன்பு டாக்டர் செல்லமுத்துவின் கார் நின்று கொண்டிருந்தது.

நந்தகுமாரும், பழனிக்குமாரும் எட்டி உள்ளே பார்த்தபோது டாக்டர் செல்லமுத்துவும், அந்த அமெரிக்கக்கார ஜோன்சும் ஒரு வயதான கிழவி முன் அமர்ந்திருந்தனர். தலையெல்லாம் சடைபிடித்து நரை பூத்திருக்க, அந்தக் கிழிவியும் நெற்றி கொள்ளாத மஞ்சள்

குங்குமத்துடன் கையில் ஒரு சூலாயுதத்தைப் பிடித்தபடி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

'' என் ஆசை மக்கா... என்னை வந்து கும்பிட்ட உங்க எல்லா கஷ்டமும் இனி நீங்கிவிடும். உங்க தொழிலும் இனி அமோகமா நடக்கும்...''

-என்றபடியே அந்த கிழவி வெறும் கையை மேலே உயர்த்தி ஒரு ஆட்டு ஆட்டி விட்டு கீழே இறக்கினாள். இறங்கிய அவள் கையில் ஒரு முழுமையான எலுமிச்சம் பழம்.

அதை டாக்டர் செல்லமுத்துவிடம் நீட்டினாள். செல்லமுத்துவும் பயபக்தியோடு வாங்கிக் கொண்டார். ஜோன்சுக்கும் அந்தக் கிழவி ஒரு எலுமிச்சம் பழத்தை அதே மாதிரி வரவழைத்து நீட்டினாள். அவரும் பேந்தப் பேந்த விழித்தபடி அதை வாங்கிக் கொண்டார். செல்லமுத்து எதையோ கேட்க விரும்பியவராக ''தாயி... மாய மூலிகை பத்தி ஆராய்ச்சி பண்ற எங்களுக்கு அது எங்க இருக்குன்னு நீதான் சொல்லணும்''- என்றார்.

''இந்த பஞ்ச மூர்த்தி மலை அருவிக்கரைகிட்ட இல்லாத மாய மூலிகைகளா... அங்கபோய் தேடுங்க. கிடைக்கும்...'' என்றாள் அவளும்.

''உன்னையே இளம்கன்னின்னு சொல்றாங்களே... ஆனா நீயோ முத்தின கிழவியா இருக்கியே?''

''யார் சொன்னது அப்படின்னு... நான் எப்பவும் கன்னிதான். அதுலையும் நித்ய கன்னி. ஆனா நரையும் திரையும் எனக்கும் விலக்கல்ல... புரிஞ்சுக்க.''

''அப்ப நாங்க கேள்விப்பட்டது...?''

''எல்லாமே பொய்யி...''



''மாய மூலிகைகளாவது மெய்யா தாயி...?''

''அது எப்படி பொய்யாகும்! அது இந்த மலைக்காட்டோட சொத்தாச்சே.''

''அதுல 'கன்னிக்காலி'ங்கற மூலிகை ரொம்ப விசேஷமாமே...?''

''ஆமாம்... விசேஷம்தான். யார் இல்லேன்னா...?''

''அதாலதான் நீகூட இளமையோட இருக்கறதா சொன்னாங்க...''

''அப்படி இருந்தாத்தான் நீ பாத்துருப்பியே...?''

''அந்த மூலிகைபத்தி தெரிஞ்ச நீ அதால இளமையோட இல்லாம ஏன் தாயி இப்படி முதுமரமா இருக்கே?''

''இதுதான் தவத்துக்கு உகந்த கோலம்! ஔவைக் கிழவியே இளம்பிராயத்தைவிட்டு முதுமை வேணும்னு கேட்டவதானே?''

''அது...அது...''

''போதும்... பேசுனது போதும், பின்னால ரொம்ப பேர் காத்துருக்காங்க பார். ஆத்தா அவங்களுக்கும் அருள் வாக்கு சொல்லணுமில்ல...''

-அந்தக் கிழவி அவர்களை நறுக்கி விலக்க, அவர்களும் எழுந்து கொண்டனர். பின் மேற்கொண்டு நின்று பேச அவகாசம் கிடைக்காத சங்கடத்தோடு நகர்ந்து வெளியேறினர்.

அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த நந்தகுமாரும் பழனிக்குமாரும் கிழவி எதிரில் அமர நந்தகுமார் கிழவியை ஊன்றிப் பார்த்தான்.

'இரண்டு நாள் முன்பு கோவிலுக்கு ஒரு இளம் தேவதையாக வந்த பெண்ணா இன்று இப்படி? இது நிஜமான முதிய தோற்றமா... இல்லை மேக்கப்பா...?'

- மனசைக் கொத்தும் கேள்விகளோடு கிழவியை ஊன்றிப் பார்த்தான்.

''நல்லா உக்காருங்க... ரெண்டு பேரும் பட்டணத்துல இருந்து வாரீகளா?'' - கிழவி கேட்டாள்.

''ஆமா... நீங்கதான் பர்வதம்மாவா?''

''நானேதான்... அதுகூட தெரியாமத்தான் என்னைப் பாக்க வந்தீங்களோ?''

''இல்ல...இல்ல...தெரிஞ்சுதான் வந்தேன்...''

''என்ன விஷயம்? கலியாணம் - காட்சி பிரச்சினையா, இல்லை கடன் தொல்லையா...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. சும்மா தரிசனம் பண்ண வந்தோம். அவ்வளவுதான்...''

''பரவால்லியே... கோரிக்கை இல்லாம கும்பிட வந்துருக்கற நீங்க ஆத்தா அருளால நல்லா இருக்கணும். நல்லாவும் இருப்பீங்க. ஆனா, இந்தச் சின்னத் தம்பிக்குத்தான் ஏதோ மனச்சஞ்சலம்போல இருக்குது. சொப்பனம் கண்டுட்டு அதுக்கும் நிஜத்துக்கும் வித்தியாசம் தெரியாம குழப்பிக்கிட்டு இருக்குது.''

- கிழவி சொன்ன மறுநொடி பழனிக்குமாரும் அதுதான் உண்மையோ என்பதுபோல நந்தகுமாரைப் பார்த்தார்.

''சார்! சத்தியமா நான் கனவெல்லாம் காணல. நான் பார்த்தது அவ்வளவும் உண்மை.'' - அவன், அவள் எதிரிலேயே விசும்பினான்.



''லுக் நந்தகுமார்... இங்க எல்லாமே ரொம்ப ரொம்ப நார்மலா இருக்கு. ஆனா...நீயோ சாதிக்கறே. இட்ஸ் ஓ.கே. நான் உன்கிட்ட அப்புறமா பேசிக்கறேன். ஆத்தா! ஆசிர்வாதம் பண்ணுங்க. நாங்க கிளம்பறோம்.''

- பழனிக்குமார் பேச்சோடு கும்பிட்டபடி தலையை முன்கொண்டு செல்ல பர்வதம்மா கிழவியும் பழனிக்குமார் நெற்றியில் குங்குமத்தை வைத்து தலையைத் தடவி ஆசிர்வாதம் செய்தாள். அதேபோல நந்தகுமாருக்கும் செய்ய, வேண்டா வெறுப்பாக அந்த நெற்றிக் குங்குமத்துடன் எழுந்தான்.

''போய்ட்டு வாங்க...'' - வழியனுப்பினாள். இருவரும் வெளியில் வந்தனர். வெளியில் டாக்டர் செல்லமுத்துவும், ஜோன்ஸூம் கிளம்பிப் போய் விட்டிருந்தனர்.

உயரமான நாகலிங்க மரத்தின் நிழல் மட்டும் தரையில் புரண்டு புரண்டு விளையாடிக் கொண்டிருந்தது. நந்தகுமார் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்பது தெரியாத குழப்பத்தில் இருந்தான்.

''என்ன நந்தகுமார்... இப்ப என்ன சொல்லப் போறே...?''

''என்னத்த சார் சொல்ல... திகில் சினிமால வர்ற மாதிரி இருக்கு சார். எனக்கு இது புது அனுபவம்...''

''என்ன புது அனுபவம்...? நீ கனவு கண்டிருக்கேன்னு நினைக்கறேன்...''

''கனவா... கடவுளே...! நான் முன்பு சொன்ன அவ்வளவும் நிஜம் சார்... சத்தியம்...''

''அப்படின்னா இங்க அதுக்கு தோதா ஒரு விஷயம்கூட இல்லையே...''

''அதான் சார் எனக்கும் புரியல. எப்பவும் ஒரு விவகாரத்துல ஒரு சிலர்தான் பல்டி அடிப்பாங்க. ஆனா, இங்கையோ ஒரு ஊரே நடிக்குது.''

''இப்பவும் நீ உண்மையை ஒத்துக்காம நான் பேசறதே பேச்சுன்னு பேசறியே. பரவால்ல விட்று. நான் ஒண்ணும் உன்னை தப்பா நினைக்கமாட்டேன்.''

''சார்... நான் திரும்பவும் சொல்றேன். நான் ஒண்ணும் நான் பேசறதே பேச்சுன்னு பேசலை. முன்னைவிட இப்பதான் நான் ரொம்ப தீவிரமாவே மாறியிருக்கேன். இந்த மலைல முந்தியாவது ஏதோ ஒரு மர்மம் இருக்கு. அது பர்வதம்மா தொடர்பானது மட்டும்தான்னு நினைச்சுக் கிட்டிருந்தேன்.

இப்ப சொல்றேன்சார்... இந்த மலைல பயங்கர மர்மம் இருக்கு, அது என்னன்னு கண்டுபிடிக்காம நான் வரமாட்டேன்...''

- நந்தகுமார் தீர்க்கமாக சபதமே போட்டான். பழனிக்குமார் பெருமூச்சுவிட்டார்.

''நம்புங்க சார் என்னை...''

''வேண்டாம் நந்தகுமார். நமக்கு வேற வேலைங்க நிறைய இருக்கு. உன் பேச்சை கேட்டு வந்ததுல இன்னிக்கு ஒருநாள் எனக்கு வேஸ்ட்டானதுதான் மிச்சம். சரி நான் கிளம்பறேன். நீ என்ன பண்ணப் போறே...?''

''அவரப்படாதீங்க... எனக்கு ஒரே ஒரு சான்ஸ் கொடுங்க. நான் சொன்னது உண்மைங்கறத உங்களுக்கு நிரூபிக்கிறேன்.''



''எப்படி...?''

''அடிவாரத்துல ஒரு வைத்தியர் இருக்கார். என்னை புலி துரத்தினப்போ நான் ஒரு பள்ளத்துல விழுந்துட்டேன். அவர்தான் என்னைக் காப்பாத்தி மருத்துவ உதவி செய்தார். அவர்கிட்ட கூட்டிக்கிட்டு போறேன். அவர் சொல்வார்.''

''நல்ல உத்யோகம்ப்பா எனக்கு... சரி இதுதான் கடைசி சான்ஸ். அந்த வைத்தியரும் உன்னை யாருன்னே தெரியலைன்னு சொல்லிட்டா அப்படியே அங்க இருந்து வண்டி ஏறிடுவேன்.

அப்புறம் உனக்கும், உன் பஞ்சமூர்த்தி மலை மர்மக் கட்டுரைக்கும் ஒரு கும்புடுதான் போட வேண்டியிருக்கும்.''

''அவசரப்பட்டு அப்படியெல்லாம் பேசாதீங்க... என் நெத்தியில பாருங்க காயத்தை...''

''சரி... சரி... வா...''

- இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர்!

## 11

மலைப்பாறை ஒன்றின்மேல் அமர்ந்திருந்தார் ஜோன்ஸ்.

பக்கத்தில் தீவிரமான முகத்தோடு டாக்டர் செல்லமுத்து.

''என்ன செல்லமுத்து... இந்த மலையைப் பத்தி நீங்க சொன்ன மாதிரி எந்த விஷயமும் இல்லையே...''

- ஜோன்ஸ் கிள்ளிவிட்டார்.

''இல்ல ஜோன்ஸ்... இங்க ஏதோ குழப்பமிருக்கு...''

''குழப்பம்...? வாட் யூ மீன்...?''

''அதபத்திதான் யோசிச்சிட்டிருக்கேன்...''

''நோ... ஒரு குழப்பமும் இல்லை. பர்வதம்மா பற்றி நீங்க சொன்னதெல்லாம் பொய். ஈவன் மாயமூலிகைகூட பொய்யாதான் இருக்கும்னு நினைக்கறேன்.''

''இல்ல... மாய மூலிகைகள் உண்மை. இந்த மலையிலயும் நிறைய சித்தர்கள் இருக்காங்க.''

''அப்படின்னா ஒருத்தரை கண்ணுல காட்டுங்க பார்ப்போம்.''

''அப்படி எல்லாம் அவங்கள சாதாரணமால்லாம் பாத்துட முடியாது ஜோன்ஸ்.''

''இதே மாதிரிதான் ஆப்பிரிக்கா காட்டுலையும் கண்டத சொல்லி என்ன ஏமாத்தினாங்க. கண்ட்ரி வேறையா இருந்தாலும் ஏமாத்தற விஷயம் ஒண்ணாதான் இருக்கு.''

- ஜோன்ஸிடம் கோபம் கொப்புளித்தது.

''ஜோன்ஸ்... அவசரப்பட்டு வார்த்தைகளை விடாதீங்க. நீங்க சித்தர் பாடல்கள் படிச்சவர். நீங்களா அவங்களை எல்லாம் பொய்யுங்கறீங்க?''

''லுக் மிஸ்டர் செல்லமுத்து... உங்க சித்தர்கள் ஒன்ஸ் அபான் எ டைம் இருந்திருக்கலாம். இப்ப நோ சான்ஸ். காலம் மாறிப் போச்சு. ஹெர்பல் விஷயமெல்லாமும் பொலூஷனால, க்ளைமேட்டால மாறிப் போயிருக்கலாம். மாய மூலிகைகள் இருக்குங்கறது ஒரு மித். அந்த மித்தை நான் நம்பத் தயாரா இல்லை. இங்க இருந்து டயத்தை வேஸ்ட் பண்ணாம கிளம்புவோம். நீங்க வாங்கின அட்வான்ஸை திருப்பிக் கொடுத்துடுங்க.''



- டாக்டர் ஜோன்ஸ் வளவள கொழகொழவென்று பேசாமல் நறுக்கென்று பேசி முடித்தார். டாக்டர் செல்லமுத்துவுக்குதான் ஏமாற்றமாகி விட்டது.

'பஞ்சமூர்த்தி மலை பற்றி கேள்விப்பட்ட விஷயமும் பர்வதம்மா பற்றி கேள்விப்பட்ட விஷயமும் வெறும் கட்டுக்கதையா?

அந்த கட்டுக் கதையை உண்மை என்று சொல்லி வைத்தியர் அண்ணாமலையும் நிச்சயம் பணத்துக்கு ஆசைப்பட்டு உதவி செய்வார் என்று நம்பி அட்வான்ஸாக வாங்கிய ஆயிரம் டாலர்களை, கிட்டத்தட்ட இந்திய மதிப்பில் நாற்பத்து எட்டாயிரம் ரூபாயை திருப்பிக் கொடுக்கத்தான் வேண்டுமா?'

டாக்டர் செல்லமுத்துவுக்குள் குழப்பமும் கூடவே கோபமும் சேர்ந்து வந்தது. இருந்தும் சமாளிக்கப் பார்த்தார்.

''ஓ.கே. ஜோன்ஸ்... எதுக்கும் அந்த பர்வதம்மா சொன்ன அருவிக் கரைப்பக்கம் போய் மூலிகைகளை தேடிப் பார்க்கலாமா?''

''எதை வெச்சு தேடுவீங்க...? உங்களுக்கு மாய மூலிகைகள் எதுன்னு தெரியுமா?''

''சில புத்தகங்கள்ல படிச்சிருக்கேன். சொர்ணசந்தி, சந்திரசந்தி, கன்னிக்காலி, வாயு ரூபின்னு நிறைய இருக்கு...''

''அது எப்படி இருக்கும்...? அதுதான் மாய மூலிகைன்னு எதைவெச்சு நம்பறது?''

''எனக்குத் தெரியும்... போகர் நாலாயிரம் படிச்சவன் நான். என்கிட்ட பாடல் குறிப்புகள் இருக்கு. அதைவெச்சு தேடுவோம். இன்னொரு வழியும் இருக்கு!''

''என்ன...?''

''அந்த வைத்தியன் அண்ணாமலைக்கு நிச்சயமா மாயமூலிகைகள் பத்தி தெரியும். பல வருஷமா நான் அந்த ஆள் வைத்தியம் பத்தி கேள்விப்பட்டேன். அந்த ஆள் நவபாஷாணம் பண்ணத் தெரிஞ்சவன். நவபாஷாணத்தால பல லிங்கங்கள் செய்து நிறைய சாமியார்களுக்கு கொடுத்திருக்கான். நவபாஷாணம் பண்ணத் தெரிஞ்சவங்களுக்கு மாய மூலிகைகள் பத்தி நிச்சயம் தெரிஞ்சிருக்கும்.''

''ஐ அக்ரி... ஆனா, அந்த ஆள் கோ-ஆப்பரேட் பண்ணமாட்டேங்கறானே?''

''பண்ண வைப்போம். அந்த ஆளோட பொண்ணு ஒருத்தி மெட்ராஸ்ல காலேஜ்ல படிச்சுக்கிட்டு இருக்கா. அவளை பிடிச்சு வெச்சுக்கிட்டு பிளாக் மெயில் பண்ணுவோம். பொண்ணு வேணுன்னா மாயமூலிகைகளை நீ அடையாளம் காட்டணும்னு சொன்னா...?''

அங்கு தொட்டு, இங்கு தொட்டு இருவரும் பிளாக்மெயில் செய்வதில் வந்து நிற்க ஜோன்ஸும் உற்சாகமாகி 'குட் ஐடியா...' என்றார்.

''அப்ப கிளம்புங்க... வெட்டியா அருவிக் கரைகிட்ட போய் டயத்தை வேஸ்ட் பண்ணாம வைத்தியரோட டாட்டரைப்போய் பார்ப்போம். பட் ஒன் திங். இந்த விஷயத்துல நாம தப்பு பண்ணினா என்னை ஒரு கிரிமினலா ஆக்கி என் பாஸ்போர்ட்டையும் உங்க கவர்ன்மென்ட் லாக் பண்ணிடும். ஆகையால ரொம்ப க்ளவரா மூவ் பண்ணணும். இதுல நான் டிஸ்டன்ஸ்லதான் இருப்பேன். இந்த கிட்நாப்பை நீங்க மட்டும்தான் பண்ணனும். இதுல என்னை சம்பந்தப்படுத்தக்கூடாது.''



''டோன்ட் ஒர்ரி... அதே சமயம் நான் காரியத்தை சக்ஸஸா முடிச்சா பேசின பணத்தைவிட கூடதரணும். சரியா...?''

''ஐ வில் பே ஒன் மில்லியன் டாலர். கவலையே படாதீங்க.''

-ஜோன்ஸ் கில்லாடித்தனமாய் பேசிவிட்டு செல்லமுத்துவை தட்டியும் கொடுத்தார்.

செல்லமுத்துவையும் உற்சாகம் தொற்றிக் கொண்டது. இருவரும் அந்த பாறையைவிட்டு விலகி காரை நோக்கி நடந்தார்கள். அது மண்சாலை மேல் ஒரு ஓரமாய் நின்று கொண்டிருந்தது.

அதில் ஏறி காரைக் கிளப்பி புழுதிக் கவளங்களைப் புரட்டிப் போட்டுவிட்டு மறைந்தும் போனார்கள்.

புழுதிக் கவளங்கள் காற்றில் கரைந்து அடங்க அங்கே வைத்தியர் அண்ணாமலை நின்று கொண்டிருந்தார். அவர் முகத்தில் குரூரப் புன்னகை!

## 12

**வை**த்தியர் வீடு!

பழனிக்குமாரும் நந்தகுமாரும் வீட்டு முன் நின்று கொண்டிருந்தனர்.

உள்ளே மாமுண்டி கொழிஞ்சி, அவுரி, திப்பிலி, முள்ளி விதை, ஆளி விதை, தேற்றாங்கொட்டை, புன்னைக் கொட்டை, கூவைக்கிழங்கு, கொள்ளுவாய் வேளை என்று ரகவாரியாய் மூலிகைகளை கண்ணாடி ஜாடிகளில் போட்டு அடைத்துக் கொண்டிருந்தான்.

''வைத்தியரே...'' - என்கிற நந்தகுமாரின் குரலைக் கேட்டு வெளியில் வந்தான்.

நந்தகுமாரைப் பார்த்து 'வாங்க சாமி' என்றான்.

''வைத்தியர் இருக்காரா?''

''இல்லையே... மலைப்பக்கம் போயிருக்காரு.''

''அடடா... எப்ப வருவாரு?''

''எப்ப வேணா வருவாரு. என்ன விசயம்...?''

''சும்மாதான் பாக்க வந்தேன். நீயே சொல்லு இரண்டு நாள் முந்தி நான் இங்க வந்தேன் தானே?''

''ஆமா... அதுக்கென்ன இப்போ...?''

- அவன் ஆமோதிக்க, நந்தகுமார் உற்சாகமாக பழனிக்குமார் பக்கம் திரும்பி ''பாத்தீங்களா சார்...'' என்றான். அதன்பின் பழனிக்குமாரே கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

''ஏம்ப்பா... இவருக்கு உங்க வைத்தியர்தான் வைத்தியம் பார்த்தாரா?''

''ஆமாங்க... ஏன் கேக்கறீங்க...?''

''இல்ல... சும்மா தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன். இவர் மலைல மயங்கிக் கிடந்தாராம். உங்க வைத்தியர்தான் காப்பாத்தினாராம். ஆமா மயங்கிக் கிடந்தவரை மலைல இருந்து உங்க வைத்தியரேவா தூக்கிட்டு வந்தார்?''

''ஆமாம்... அதுல என்ன சந்தேகம்...?''

''தூக்கிக்கிட்டு வந்தாரா... இல்லை எதாவது வண்டியில போட்டு எடுத்துக்கிட்டு வந்தாரா...?''

''தூக்கிக்கிட்டுத்தான் வந்தாரு... வண்டிக்கு அவர் எங்க போவாரு...?''



''அது எப்படி ஒரு மனுஷனால அதுவும் ராத்திரியில மலைல இருந்து அதுவும் கிட்டத்தட்ட பதினைஞ்சு கிலோ மீட்டர் தூரம் ஒருத்தரை தூக்கிக்கிட்டு வரமுடியும்?''

''எங்க வைத்தியருக்கு இதெல்லாம் சாதாரணம். அவர் உலோக தண்ணி குடிச்சுட்டு வயிறு கல்லாகிப்போய் விழுந்து கிடந்த வேங்கைப் புலிக்கே வைத்தியம் பார்த்தவர்... இதென்னங்க...?''

''உலோக தண்ணியா...?''

''ஆமாங்க... உங்களுக்குத் தெரியாதா? மலைல பாறைல இடி விழுந்தா அங்க குழி விழுந்து தண்ணி தேங்கிடும். அதை குடிச்சா வயிறு கல்லாயிடும். அதைத்தான் உலோக தண்ணி, உலோகக் கஞ்சின்னு சொல்வாங்க... அதுல கல்லைப் போட்டா இரும்பாயிடும். அவ்வளவு பவர் அதுக்கு...''

- மாமுண்டி வெகுளித்தனமாக தனக்குத் தெரிந்ததை பேசினான் - ஆனால் அவ்வளவும் சித்த மருத்துவ உலகின் அசாதாரண விஷயங்கள் என்பது தெரியாமலே...

பழனிக்குமாருக்கு அதை எல்லாம் கேட்கக் கேட்க பிரமிப்பாக இருந்தது. நடுவில் புலி ஒன்றின் உறுமல் சப்தம் காதில் கேட்டது.

''என்னப்பா இது உறுமல் சப்தம்?''

''நான் சொல்லலை... வேங்கைப்புலிக்கே வைத்தியம் பார்ப்பார்னு? அதான். உலோக தண்ணி குடிச்ச புலி ஒண்ணு காட்டுல கஷ்டப்பட்டுக்கிட்டிருந்துச்சு. அதான் தூக்கிக்கிட்டு வந்து மருந்து கொடுத்து படுக்க வெச்சுருக்காரு. அதுதான் நடுநடுவுல கண்ணு முழிச்சுக்கிட்டு உறுமுது.''

''எங்க...?''

''வாங்க காட்றேன்...'' - அவன் வைத்தியர் வீட்டின் பின்னால் கல் தொட்டி ஒன்றின் அருகே அழைத்துச் சென்றான். அங்கே ஆறடி நீள வேங்கைப்புலி ஒன்று பூனைக்குட்டி போல படுத்திருந்தது. அருகில் ஒரு இலுப்ப மரம். அதில் ஒரு சங்கிலியைப் பூட்டி அந்தப் புலியின் கழுத்திற்கு இணைப்பைக் கொடுத்து கட்டிப் போட்டிருந்தார் வைத்தியர்.

பழனிக்குமாருக்கும், நந்தகுமாருக்கும் சப்த நாடியும் ஒரு விநாடி நின்று பிறகுதான் துடித்தது.

கண்களும் காதுவரை விரிந்துவிட்டன.

''என்னப்பா இது... ஏதோ ஆடு, மாடுக்கு வைத்தியம் பாக்கற மாதிரி புலிக்கே வைத்தியம் பாக்கறாரே உங்க வைத்தியர்...''

- பழனிக்குமார் வியந்தார்.

''அவரை யாருன்னு நினைச்சீங்க...? மாய மூலிகை பத்தியெல்லாம் தெரிஞ்சவர் அவரு.''

- மாமுண்டி தொடர்ந்து அவரது பெருமையை விவரித்தான்.

''மாய மூலிகையா...? அப்படி எல்லாம்கூட இருக்குதா என்ன...?''

''அதனாலதானே ஒரு குஷ்டரோகியான நானே இப்ப மனுஷனா இருக்கேன்.''

''என்னது... நீ குஷ்ட ரோகியா இருந்தவனா...?''

''ஆமாங்க... எந்த ஜென்மத்துப் பாவமோ... அந்த வியாதி எனக்கும் வந்துடுச்சு. ஆனா, இப்ப பாருங்க. சுத்தமா



குணமாயி நான் திடமா இருக்கறதை...'' - மாமுண்டி கைகளை அவர்கள் இருவர் எதிரிலும் ஆட்டிக் காட்டினான்.

பழனிக்குமாருக்கு தன் காதில் விழும் விஷயங்கள் எல்லாம் உண்மைதானா, இல்லை இவன் உளறுகிறானா? என்று தோன்றினாலும் வாலைக் குழைத்தபடி படுத்திருந்த வேங்கைப்புலி 'அது உண்மையாகத்தானிருக்க முடியும்' என்கிற ஒரு நம்பிக்கையை உருவாக்கிற்று.

''என்ன பாக்கறீங்க...? இந்த மாய மூலிகைங்கள தெரிஞ்சுக்க ஒரு அமெரிக்கக்காரருகூட வந்தாரு. ஆனா வைத்தியர் எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லி அனுப்பி வெச்சுட்டாரு.''

- மாமுண்டியின் அடுத்த விளக்கம் பழனிக்குமாருக்கு மலையில் பர்வதம்மாள் முன் பார்த்த ஜோன்ஸை ஞாபகப்படுத்திற்று.

'இவன் பொய் சொல்லவில்லை... மனதில் பட்டதை அப்படியே பேசுகிறான்' என்பதும் புரிந்து போயிற்று.

''பாத்தீங்களா சார்... இதெல்லாம் டாப் சீக்ரெட்ஸ். இதை சாதாரணமா நாம தெரிஞ்சுக்க கூடாதுன்னுதான் மலைலகூட எல்லாரும் நம்மளை டபாய்ச்சிருக்காங்க.''

- நந்தகுமார் குறுக்கே நுழைந்தான்.

''கொஞ்சம் சும்மா இரு நந்தா... ஏப்பா தம்பி நீ சொல்லு. உனக்கு மலைல இருக்கற பர்வதம்மாவைத் தெரியுமா?'' -பழனிக்குமார் மாமுண்டியிடம் கேள்வி களைத் தொடர்ந்தார்.

''தெரியுமே... பர்வதம்மா, வைத்தியரோட அம்மா தானே?''

''என்னது...?'' - பழனிக்குமார் வியப்பின் உச்சி முனைக்கு ஏற -

''ஆமாங்க... வைத்தியர் குடும்பம்தான் இந்த மலைல இருக்கற மூலிகைங்கள பாதுகாத்துக்கிட்டிருக்குது. பர்வதம்மாவுக்குத் தெரியாத மூலிகைங்க கிடையாது. அவங்க சாமி...''

''சாமின்னா...?''

''அம்மா மாயமா மறைவாங்க. சின்னப்புள்ளையா மாறுவாங்க. பாம்பு பறவைன்னு எந்த வடிவமும் எடுப்பாங்க! மலைக்காட்டுல யாராவது தப்புதண்டா பண்ணா அவங்கள அடிச்சு விரட்டுவாங்க. இரண்டுநாள் முந்திகூட ஒரு யானையை வேட்டையாடின திருட்டுப் பசங்களை ஓடஓட விரட்டி சேத்துப் பள்ளத்துல விழவெச்சு அமுக்கிக் கொன்னுட்டாங்க... வைத்தியர் அய்யா அதைச் சொல்லி சந்தோஷப்பட்டுக்கிட்டிருந்தாரு...''

''நந்தா... என்ன இது? இந்த ஆள் நம்ப முடியாததையே பேசறான். எனக்குத் தலையே சுத்துது.''

- பழனிக்குமாரின் படபடப்பு மாமுண்டிக்கு சிரிப்பைத்தான் தந்தது.

''அட என்னங்க நீங்க... நான் சொல்றதை நம்ப முடியலைன்னா போங்க. யாருக்கு நஷ்டம்? இதை எல்லாம் நம்பினதாலதான டாக்டர் செல்வமுத்தய்யா அமெரிக்கா காரனோட வந்தாரு?''

''அந்த அமெரிக்காகாரருக்கு உங்க வைத்தியர் என்ன பதில் சொன்னாரு?''

'''எனக்கு எதுவும் தெரியாது'ன்னு சொல்லி திருப்பி அனுப்பிட்டாரு. வைத்தியரை பொறுத்தவரை இந்த மலையும் இதுல விளையற மூலிகைங்களும் சாமிங்க மாதிரி... 'ஐயய்யோ காப்பாத்துங்க'ன்னு கால்ல வந்து விழுந்தாகாசே வாங்காம கூட வைத்தியம் பார்ப்பாரு. ஆனா மலைல இருக்கற மூலிகைங்களை திருடி காசு சம்பாதிக்க நினைச்சா சும்மா விடமாட்டாரு.''



- மாமுண்டியின் விளக்கம், பழனிக்குமாருக்கு மொத்தத்தையும் புரிய வைத்து விட்டது.

''நந்தா, நீ சொன்னது உண்மைதான். மலைல நாம பார்த்தது அவ்வளவும் நாடகம்தான். ஆனா நல்ல காரணத்துக்காக நடந்த அழகான நாடகம்.

நானே இல்ல நீயோ இந்த மாமுண்டியை பார்க்காம போயிருந்தா, இல்ல - இந்த மாமுண்டியும் இப்படி வெகுளியா பேசாம போயிருந்தா நம்ம வரைல சாரி என் வரைல நீ சொன்னது ஒரு கனவாதான் இருக்கும். நீயும் புரிஞ்சுக்க முடியாத ஒரு புதிர்னு இந்த விஷயத்தைத் தலை முழுகியிருப்பே.

ஆனா நாம அதிர்ஷ்டசாலிகள்.

அதான் இந்த மாமுண்டி மூலமா எல்லாம் தெரிய வந்திருக்குது. நம்ம நாட்டு மூலிகைகள் பத்தி எனக்கு எப்பவுமே ஒரு மதிப்பு உண்டு. ஆனா அது நான் மதிச்ச அளவுக்கும் மேலான ஒண்ணுங்கறது இப்ப தெரிஞ்சு போச்சு.

எவ்வளவு நேரமானாலும் சரி... வைத்தியரை பாத்துட்டுதான் போகணும். இப்படி ஒரு அபூர்வமான மனுஷனைப் பார்க்க ரியலா கொடுத்து வெச்சுருக்கணும்.''

- பழனிக்குமார் அதித உணர்ச்சி வசப்படும்போது எலும்பும் தோலுமான மாமுண்டி சிறுத்தைப் புலி அருகே

சென்று அரை மயக்கத்தோடு படுத்திருக்கும் அநன் கழுத்தை தைரியமாகத் தடவிக் கொடுத்தான்.

- ''சார் பார்த்தீங்களா... இப்படி எல்லாம் ஒரு காட்டுப் புலிகிட்ட நெருங்க முடியுமா? வைத்தியர் வந்தா இந்த மூலிகை ரகசியங்களை மூடி மறைச்சு வைக்காம எய்ட்ஸ்க்கு, கான்சருக்கெல்லாம் மருந்து கண்டு பிடிங்கன்னு சொல்லணும்.

நம்ம பத்திரிகைல வைத்தியர் படத்தையும் பர்வதம்மா படத்தையும் அட்டைப் படத்துல போட்டு உலகத்தையே திரும்பிப் பார்க்க வைக்கணும் சார்...''

''அட போய்யா ஃபூல்! இதெல்லாம் ரகசியமா இருக்குபோதே அமெரிக்காவுல இருந்து ஆள் வருது. இதை நாம பட்டவர்த்தனப் படுத்தினா அவ்வளவுதான்.''

''அப்ப கட்டுரையா எழுத வேண்டாம்னு சொல்றீங்களா?''

''எழுதக்கூடாதுன்னு சொல்றேன்...''

''அப்புறம் எப்படி சார் நம்ம நாட்டோட மதிப்பு உலகத்துக்குத் தெரியவரும்.''

''அது எப்பவுமே இருக்கு. இனிதான் தெரிய வரணும்னு இல்லை. நீ வாயை மூடிக்கிட்டிரு. வைத்தியர் வரட்டும். அவர் என்ன சொல்றாருன்னு கேட்போம்.''

- இருவரும் காத்திருக்கத் தொடங்கினர்.



## 13

ஜான்சும், டாக்டர் செல்ல முத்துவும் காரில் சென்னை சாலையில் சீறிக் கொண்டிருந்தனர். டாக்டர் ஜோன்ஸ் விண்டோ வழியே நழுவும் புளியமரங்களைப் பார்த்தபடியே வந்தார்.

''ரோட்டு ஓரமா புளியமரம்கற உங்க சிஸ்டம் சூப்பர்...'' என்றார்.

''ஸ்டேட்ஸ்ல எப்படி...? இப்படி புளியமரம் கிடையாதா?''

''இல்ல... அங்க எல்லாமே காட்டு மரங்கள்தான். அதோட இப்படி சாலை ஓரமா நிழலுக்காகன்னு திட்டமிட்டு வளர்க்கலை.''

''இதெல்லாம் அசோகர் காலத்து நாகரீகம். புளிய மரமும் நல்லா வெய்யில் தாங்கும்...''

''ஆமாம்... உங்க ஊர்லதான் நாலு வித க்ளைமேட். எங்க ஊர்ல அப்படி இல்ல. ஹெவி சம்மரே அங்க கிடையாது. ஆனா ஹெவி வின்டர் உண்டு.''

''அதனாலதான் அங்க எங்க ஊர் அளவுக்கு ஹெர்பல்ஸ் இல்லையோ?''

''ஆமாம்... உங்க க்ளைமேட் ஒரு வரப்ரசாதம். குளிர்காலம்; அப்புறமா வசந்தகாலம்; அப்புறமா கோடைகாலம்; அப்புறமா காத்துக்காலம்; அப்புறமா மழைகாலம் ஓ... என்ன ஒரு பியூட்டிஃபுல் ஆர்டர்!''

''தட்ஸ் இண்டியா!''

''ரியலா... உங்க ஊர் ஒரு டிவைன் கன்ட்ரிதான் செல்லமுத்து.''

''இப்படி பாராட்டினா மட்டும் போதாது டாக்டர் ஜோன்ஸ். மூலிகை ரகசியம் தெரிஞ்ச பிறகு ஒன்மில்லியன் டாலருக்கு மேல போட்டுக் கொடுக்கணும்.''

- அதைக்கேட்டு ஜோன்ஸ் சிரித்தார்.

மனதுக்குள் 'ஊர் அற்புதமாக இருக்கு... ஆனா மனிதர்கள்ல சிலர் பிச்சைக்காரர்களா இருக்கீங்களே...' என்கிற ஏளனம் ஒரு ஓட்டம் ஓடியது.

காரிடமும் நல்ல சீற்றம்.

''ஆமா... அந்தப் பெண்ணை எப்படி கிட்நாப் பண்ணப் போறீங்க செல்லமுத்து?''

''வேடிக்கை பாருங்க. 'வைத்தியருக்கு உடம்பு சரியில்லை. சீரியஸ்'னு ஒரு போன் போதும். அந்தப் பொண்ணு ஹாஸ்டல விட்டு புறப்படும். அது வெளியில வந்துட்டா போதாதா? 'உங்கப்பாவை பாக்கத்தான் போறோம்'னு நம்ம கார்லையே ஏத்திக்கிட்டு நம்ம வேலையைக் காட்ட வேண்டியதுதான்.''

''இந்த மாதிரி ஐடியால்லாம் எப்படித்தான் உங்களுக்கு ஸ்ட்ரைக் ஆகுதோ?''

- ஜோன்ஸ் பாராட்டும்போது காருக்குள் மெல்லிசாக 'ஸ்ஸ்ஸ்' என்கிற சப்தம்.

''செல்லமுத்து... என்ன இது ஸ்ஸ் சப்தம்...? உங்களுக்கு கேக்கல?'' - ஜோன்ஸ் கேட்க செல்லமுத்துவின் காதும் விடைக்க, ரியர் மிர்ரரில் பின் சீட்டில் நல்லபாம்பு ஒன்று படம் விரித்த நிலையில் அமர்ந்திருப்பது தெரிந்தது.



அதிர்ச்சியுடன் கழுத்தை வளைத்து திருப்பிப் பார்த்த செல்ல முத்துவை அதுவும் அவர் பார்க்கும் க்ஷணத்தில் எம்பிச் சீறியது. அவ்வளவுதான்...! அலறிய செல்லமுத்துவின் கண்ட்ரோலை விட்டு விலகிய காரும் அசுர வேகத்தில் பக்கத்து புளிய மரத்தின் மேல் மோதியது!

அதன் பின் எல்லாமே சொல்ப நிமிடங்களில் முடிந்துவிட்டது. சாலையில் செல்லும் மற்ற கார் காரர்களும் வாகனக்காரர்களும் ஓரம் கட்டிவிட்டு இறங்கி மோதிய காரை எட்டிப்பார்க்கும் போது செல்லமுத்துவும் ஜோன்சும் ரத்தச் சகதியாகியிருந்தார்கள்.

சீறிய அந்தப் பாம்பு ஓசையின்றி கிடைத்த இடைவெளியில் யார் கண்ணிலும் படாமல் காரைவிட்டு இறங்கி விறுவிறுவென்று புளிய மரத்தை ஒட்டி ஓடி புதர் ஒன்றில் புகுந்து மறைந்தும் போனது!

## 14

**வீ**ட்டுக்குள் வைத்தியர் நுழைந்தபோது நந்த குமாரும், பழனிக்குமாரும் காத்திருந்தனர். மாமுண்டி ஒவ்வொரு மூலிகையாகக் காட்டி அதன் பெருமைகளை விளக்கிக் கொண்டிருந்தான்.

வைத்தியருக்குப் புரிந்துவிட்டது.

பழனிக்குமார் மிக மரியாதையாக எழுந்து ''வணக்கம் வைத்தியரே...'' என்று பணிவாகக் கும்பிட்டான். நந்த குமாரும் அவரை மிக மரியாதையாகப் பார்த்தான்.

''வணக்கம்... நீங்க...?''

''என் பேர் பழனிக்குமார். சூர்யோதயம் பத்திரிகையோட உதவி ஆசிரியர்.''

''அப்படியா... சந்தோஷம்!''

''உங்களை சந்திக்கறதுல எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. பெருமையுங்கூட....''

''என்ன தம்பி பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க... நான் ஒரு சாதாரண வைத்தியன்.''

''தெரியும். நீங்க அப்படித்தான் சொல்வீங்க. ஆனா நீங்க இந்த பஞ்சமூர்த்தி மலைக் காட்டையே கட்டிக் காப்பாத்தற ஒரு சித்தர்ன்னு எனக்குத் தெரியும். உங்க சிஷ்யன் எல்லாத்தையும் சொல்லிட்டான்.''

''நான் சித்தனா...? சேச்சே... ஏண்டா மாமுண்டி என்னத்தடா இவங்க கிட்ட உளறினே?''

''அவன் உளறலை. உண்மைகளை சொன்னான். கேட்கவே புல்லரிச்சுது. கவலைப்படாதீங்க. உங்களைப் பத்தின எந்த ஒரு உண்மையையும் நாங்க பத்திரிகைல எழுத மாட்டோம். எழுதினா என்ன நடக்கும்னு தெரியும்.''

''தம்பி... என்ன சொல்றீங்க?''

''எதுவும் பேசாதீங்க. எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க. நாங்க டாக்டர் செல்லமுத்து மாதிரி சுயநலவாதி இல்லை. அமெரிக்க டாக்டர் மாதிரி எதையும் கடத்தவும் வரலை. நாங்க செஞ்ச புண்ணியம்தான் உங்களைப் புரஞ்சுக்க முடிஞ்சது.''

''திரும்பவும் சொல்றேன். நீங்க அநாவசியமா என்னைப் புகழறீங்க. நான் ஒரு சாதாரண மனுஷன்.''



''நீங்க அப்படித்தான் சொல்வீங்க... எந்த பெரியவரும் தன்னைப் பெரியவன்னு சொல்லிக்கமாட்டாங்க. உங்களுக்கு ஒரு வேண்டுகோள்.''

''என்ன தம்பி?''

''எங்களுக்கு ஒரு ஆசை...''

''என்னன்னு சொல்லுங்க...''

''உங்ககிட்ட சிரஞ்சீவி மூலிகைன்னு ஒண்ணு இருக்காமே. அதை சாப்பிட்டா வியாதியே வராதாமே.''

''அதுக்கென்ன?''

''எங்களுக்கு நீங்க அதைத் தரணும்.''

- வைத்தியர் அதைக் கேட்டு பலத்த சிந்தனையோடு மாமுண்டியைப் பார்த்தார். பின் பேசினார்.

''தரேன் தம்பி. ஆனா நீங்களும் எனக்கு ஒரு உதவி செய்யணும்.''

''என்ன செய்யணும் சொல்லுங்க...''

''இந்த மாமுண்டியை உங்கக்கூட கூட்டிக்கிட்டு போய் உங்க பத்திரிகை ஆபீஸ்லையே ஒரு வேலை போட்டுக் கொடுக்கணும்.''

''தாராளமா... ஆனா உங்களுக்கு அப்புறம் யார் உதவி செய்வா?''

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். எனக்கு அந்த உதவியை செய்யறதா இருந்தா நான் சிரஞ்சீவி மூலிகை மருந்தைத் தரேன்.''

- வைத்தியர் ஒரு முடிவோடுதான் பேசினார். பழனிக்குமாரும் 'சரி' என்று தலையை ஆட்டினார்.

வைத்தியரும் உள்ளே சென்று ஒரு மூலிகையை எடுத்து வந்து பாலில் கலந்து நந்தகுமாருக்கும், பழனிக்குமாருக்கும் கொடுத்தார். பின் மாமுண்டியிடமும் ''நீயும் குடிடா...'' என்று அவனுக்கும் கொடுத்தார். மூவரும் குடித்தார்கள். அதன்பின் அவர் காலில் விழுந்தார்கள்.

''நல்லது. போய்ட்டு வாங்க...''

- வைத்தியர் வழியனுப்பி வைத்தார். திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தனர். நடக்கும் போது ''அடிக்கடி வருவோம்'' என்றனர்.

''ஞாபகம் இருந்து வரணும்னு தோணினா வாங்க...'' - என்றார். அப்படியே ''நல்ல தூக்கம் வரும். தூக்கத்துல பிரமாதமா கனவெல்லாம் வரும்.'' என்றும் சொல்லி டாட்டா காட்டினார்!

அறைக்குத் திரும்பிய நந்தகுமாருக்கு கொட்டாவி வாயண்ணங்களைப் பிளந்தது. பேண்ட் சட்டையைக்கூட கழற்றத் தோன்றாமல் படுக்கையில் போய் விழுந்தான்.

இதே நிலைதான் பழனிக்குமாருக்கும்... அவரது வீட்டிலேயே ஒரு மூலையில் மாமுண்டியும் போய் படுத்தான்.

மறுநாள்!

கண் திறந்தது முதலில் மாமுண்டிதான்!

தான் எங்கிருக்கிறோம் என்பதே தெரியவில்லை.

கொட்டாவி பிரிய வந்த பழனிக்குமாருக்கும் மாமுண்டி ஒரு புதிய மனிதனாய்த் தெரிந்தான்.

''யாருப்பா நீ...?''

மாமுண்டியும் திருப்பிக் கேட்டான்.



''நீங்க யாருங்க...?''

''என் வீட்ல இருந்துக்கிட்டு என்னையே யாருன்னு கேட்கறியா நீ?''

''இது உங்க வீடுங்களா...? மன்னிச்சுக்குங்க. நான் ஒரு நாடோடி... எப்படி இங்க வந்தேன்னே தெரியல...''

''போப்பா முதல்ல வெளிய...''

- பழனிக்குமார் விரட்ட மாமுண்டியும் மலங்க மலங்க பார்த்தபடி வெளியேறினான்.

அதன்பின் பழனிக்குமார் குளித்து முடித்து ஆபீசுக்குப் போனபோது நந்தகுமார் வந்திருந்தான்.

பஞ்சமூர்த்தி மலை பற்றியோ வைத்தியர் பற்றியோ பர்வதம்மாள் பற்றியோ எதுவும் பேசாமல் பழைய நந்தகுமாராக ''சார் எதாவது ஒரு நல்ல அசைன்மென்ட் இருந்தா கொடுங்க சார்...'' - என்று கேட்க ''நீ என்ன எங்க ஸ்டாஃப் ரிப்போர்ட்டரா... போப்பா. போய் உன் நோக்கத்துக்கு என்ன மேட்டர் கிடைக்குதோ கொண்டுகிட்டு வா...'' என்றார் பழனிக்குமார்.

''கல்யாணமாகப் போகுது சார் எனக்கு... உங்க ஸ்டாஃப் ரிப்போர்ட்டரா அப்பாயிண்ட் பண்ணக் கூடாதா சார்...?'' - என்று வழக்கம்போல கெஞ்சினான். அப்போது டேபிளுக்கு புளிய மரத்தில் மோதிச் செத்த டாக்டர் ஜோன்ஸ், செல்லமுத்து பற்றிய செய்தி வந்து சேர்ந்தது.

'கண்ணு மண்ணு தெரியாம காரை ஓட்டி இப்படியா சாவாறுங்க?' - என்று இகழ்ந்தபடியே, வந்த அந்த செய்தியை பழனிக்குமார் வாசிக்கத் தொடங்க, நந்த குமாருக்கு ஒரு ஐடியா தோன்றியது.

''சார், இந்த ஆக்சிடென்ட் பத்தின தகவல்களை டெடெய்ல்டா கறந்துக்கிட்டு வரட்டுமா சார்...?'' - என்று கேட்க,

''அதான் செத்துட்டாங்களே... இன்னும் என்ன டெடெயில்... போய் வேற ஏதாவது வித்தியாசமான விஷயத்தைக் கொண்டுகிட்டு வாய்யா'' என்றார் பழனிக்குமார்.

நந்தகுமாரும் தலையாட்டிவிட்டுக் கிளம்பினான். வெளியே வந்தான். எதிரில் வைத்தியர் அண்ணாமலை வந்து கொண்டிருந்தார்.

''வணக்கம் தம்பி... இங்க சப்-எடிட்டர் எங்க இருக்காரு...?'' - கேட்டார்.

''அப்படியே ரைட்ல போய் மேலபோங்க. முதல் ரூம்ல இருப்பாரு...'' - நந்தகுமார் யாருக்கோ வழி காட்டுவது போல காட்டிவிட்டுக் கிளம்பினான். அதைக் கேட்டு ரசித்து சிரித்த வைத்தியரும் அவன் கிளம்பிச் செல்லவும் திரும்பி நடக்கத் தொடங்கினார். அவர் உதட்டில் அர்த்தம் காண முடியாத மர்மமான மாயப்புன்னகை மட்டும் அழியாமல் ஒட்டிக் கொண்டிருந்தது! ரகசியத்தை ரகசியமாகவே வைத்துக் கொள்ளத் தெரிந்தவர்களுக்கு வேண்டுமானால் அதற்குப் பொருள் தெரிய வரலாம்!

நிறைந்தது

சென்னை மாவட்ட கிளை நூலகம்
37671
546927
கொளத்தூர், சென்னை 99.